# சித்தாந்தசரபம்



ஸ்ரீலஸ்ரீ கணபதிப்பிள்ளை ஞானப்பிரகாசசிவம்

குருமுதல்வர்

இலங்கை மெய்கண்டார் ஆதீனம் - 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்


# யாழ்ப்பாணத்து நல்லூர்
# ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர்



சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றிய பெருமான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சித்தாந்தசரபம்



பிறப்பு
1927.12.19

முத்தி
2007.01.29

## ஸ்ரீலஸ்ரீ கணபதிப்பிள்ளை ஞானப்பிரகாசசிவம்

குருமுதல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# திருமுறைப்பாடல்கள்

## விநாயகர் துதி

அல்லல் போல் வல்வினைபோம் அன்னை வயிற்றில்
பிறந்த தொல்லைபோம் போகாத்துயரம் போம்
நல்லகுணமதிக மாமருணைக் கோபுரத்தில் வீற்றிருக்கும்
செல்வக் கணபதியை கைதொழுதக் கால்

## திருஞானசம்பந்தர் அருளிச் செய்த தேவாரம்
## முதலாம் திருமுறை

வண்ண மலரானும் வைய மளந்தானும்
நண்ண லரியானை நல்லூர்ப் பெருமானைத்
தண்ண மலர்தூவித் தாள்க டொழுதேத்த
எண்ணு மடியார்கட் கில்லை யிடுக்கணே.

## இரண்டாம் திருமுறை

அலைமல்கு தண்புனலும் பிறையுஞ்சூடி யங்கையில்
கொலைமல்கு வெண்மழுவு மனலுமேந்துங் கொள்கையீர்
சிலைமல்கு வெங்கணையாற் புரமூன்றெரித்தீர் திருநல்லூர்
மலைமல்கு கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே.

## மூன்றாம் திருமுறை

பேதைமட மங்கையொரு பங்கிட
மிகுத்திடப மேறியமரர்
வாதைபட வண்கடலெ ழுந்தவிட
முண்டசிவன் வாழுமிடமாம்
மாதரொடு மாடவர்கள் வந்தடி
யிறைஞ்சிநிறை மாமலர்கடுய்க்
கோதைவரி வண்டிசைகொள் கீதமுரல்
கின்றவளர் கோகரணமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருநாவுக்கரசு நாயனார் அருளிச் செய்த தேவாரம்

## நான்காம் திருமுறை

பொன்போல மிளிர்வதொர் மேனியினீர்
புரிபுன்சடை யீர்மெலி யும் பிறையீர்
துன்பேகவ லைபிணி யென்றிவற்றை
நணுகாமல் துரந்து கரந்தும்இடர்
என்போலிகள் உம்மை யினித்தெளியார்
அடியார்படு வதிது வேயாகில்
அன்பேஅமை யும்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே.

## ஐந்தாம் திருமுறை

மின்னின் நேரிடை யாளுமை பங்கனைத்
தன்னை நேரொப் பிலாத தலைவனைப்
புன்னைக் கானற் பொழிற்புக லூரனை
என்னு ளாகவைத் தின்புற் றிருப்பனே.

## ஆறாம் திருமுறை

எல்லா உலகமு மானாய் நீயே
ஏகம்ப மேவி யிருந்தாய் நீயே
நல்லாரை நன்மை யறிவாய் நீயே
ஞானச் சுடர்விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைக ளறுப்பாய் நீயே
புகழ்ச்சே வடியென்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வந் தருவாய் நீயே
திருவையா றகலாத செம்பொற் சோதீ.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச் செய்த தேவாரம்

## ஏழாம் திருமுறை

தம்மை யேபுகழ்ந் திச்சை பேசினுஞ்
சார்கி னுந்தொண்டர் தருகிலாப்
பொய்ம்மை யாளரைப் பாடா தேயெந்தை
புகலூர் பாடுமின் புலவீர்காள்
இம்மை யேதருஞ் சோறுங் கூறையும்
ஏத்த லாம்இடர் கெடலுமாம்
அம்மை யேசிவ லோகம் ஆள்வதற்
கியாதும் ஐயுற வில்லையே.

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச் செய்த திருவாசகம்

## எட்டாம் திருமுறை

பரிதிவாழ் ஒளியாய் பாதமே அல்லால்
பற்றுநான் மாற்றுலேன் கண்டாய்
திருஉயர் கோலச் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
கருணையே நோக்கி கசிந்துளம் உருகிக்
கலந்து நான் வாழும்ஆறு அறியா
மருளனேன் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருக என்று அருள் புரிவாயே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமாளிகைத் தேவர் அருளிச் செய்த திருவிசைப்பா

## ஒன்பதாம் திருமுறை

நீறணி பவளக் குன்றமே நின்ற
நெற்றிக்கண் உடையதோர் நெருப்பே
வேறணி புவன போகமே யோக
வெள்ளமே மேருவில் வீரா
ஆறணி சடைஎம் . அற்புதக் கூத்தா
அம்பொன்செய் அம்பலத் தரசே
ஏறணி கொடிஎம் ஈசனே உன்னைத்
தொண்டனேன் இசையுமா றிசையே.

## சேந்தனார் அருளிச்செய்த

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
பல்லாண்டு கூறுதுமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூலநாயனார் அருளிச் செய்த திருமந்திரம்
## பத்தாம் திருமுறை

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளும்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

## நக்கீரதேவநாயனார் அருளிச் செய்த திருமுருகாற்றுப்படை
## பதினொராந் திருமுறை

கொம்பார் குளிர்மறைக் காடனை
வானவர் கூடிநின்று
நம்பா எனவணங் கப்பெறு
வானை நகர்ளரிய
அம்பாய்ந் தவனை வலஞ்சுழி
யானையண் ணாமலைமேல்
வும்பார் நறுங்கொன்றைத் தாருடை
யானை வணங்குதுமே.

## சேக்கிழார் நாயனார் அருளிய பெரிய புராணம்
## என்று வழங்கும் திருத்தொண்டர் புராணம்
## பன்னிரண்டாந் திருமுறை

சொல்லுவது அறியேன் வாழி
தோற்றிய தோற்றம் போற்றி
வல்லைவந்து அருளி என்னை
வழித்தொண்டு கொண்டாய் போற்றி
எல்லையில் இன்ப வெள்ளம்
எனக்கருள் செய்தாய் போற்றி
தில்லை அம்பலத்துள் ஆடும்
சேவடி போற்றி என்ன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அருணகிரிநாதர் அருளிய

## திருப்புகழ்

மருக்கு லாவிய மலரணை கொதியாதே
வளர்த்த தாய்தமர் வசையத மொழியாதே
கருக்குலாவிய அயலவர் பழியாதே
கடப்ப மாலையை யினிவர விடவேணும்
தருக்குலாவிய கொடியிடை மணவாளா
சமர்த்த னேமணி மரகத மயில்வீரா!
திருக்குவாரடி நிழல்தனி லுறைவோனே
திருக்கை வேல்வடி வழகிய பெருமாளே.

திருச்சிற்றம்பலம்

## அபிராமியம்மை பதிகம்


கலையாத கல்வியும் குறையாத வயதுமோர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தா னமும்
தாழாத கீர்த்தியும்மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலுமொரு
துன்பமில் லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில்அன்பும் உதவிப் பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி! அபிராமியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாகபூஷணி அம்பாள் துதி


எனக்கென்றோர் தனிவரம்யான் கேட்க வில்லை
என்னினத்தார் வாழ்வொன்றே கருத வில்லை
உனக்கெல்லா உயிர்களுமே சொந்த மென்ற
உண்மையைநான் ஒருபோதும் மறந்த தில்லை
சினங்கொண்டு தீங்கிழைக்கம் தீயர் தாமும்
சீலமுற வேண்டுமென்றே வேண்டு கின்றேன்
தனக்கொருவ ரொப்பில்லாத் தாயே இந்தத்
தாரணியில் சாந்தியினைத் தருவாய் நீயே.

நயினை க. இராமச்சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருமுதல்வர்



சித்தாந்த சரபம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**விநாயகர் வெண்பா அந்தாதி**

**தில்லையந்தாதி, பராசத்திமாலை, கோயில் அல்லது**

**சிதம்பரச் சிறப்பு முதலாம் திருநெறிய**

**நூல்களின் ஆசிரியர்**

பண்டிதர் செ. சிவப்பிரகாசம் அவர்கள்

**அளித்த**

## சாற்றுக்கவி

திருவோங்கு சுழிபுரத்தே என்றும் மேலாஞ்
சிவமோங்கு பறாளைதனி லுறையுந் தெய்வ
மருவோங்கு மீசுவர விநாய கர்மேல்
மாண்புமிகு திருவூஞ்ச லிசைதான் செய்தோன்,
கருவோங்கு கலைஞானம் பலவும் வல்லோன்,
கணபதியாம் பிள்ளையெனுங் கவிஞன்! வித்வான்:
குருவோங்கு மூஞ்சலிசை குவல யத்தே
கோலமுடன் நீடூழி வாழி! வாழி!!

## பறாளை விநாயகர் ஊஞ்சல்

### காப்பு

சீர்பரவு சிவனடியார் பத்தி யோடுஞ்
சிவநெறியைப் பேணுகின்ற தெய்வ ஊராம்
கார்மருவு சோலைபயில் குயில்கள் பாடக்
கருணைமுருகனருள்சேர் மயில்க ளாடும்
பேர்பரவு சுழிபுரத்துப் பறாளை மேவும்
பெரும்புகழ்சேர் ஈசுரவி நாய கர்மேல்
பார்பரவு ஊஞ்சலிசை பண்ணிற் பாடப்
பறாளையுறை விநாயகர்தாள் பணிந்து வாழ்வாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல்

திருவோங்கு நால்வேதத் தூண்கள் நாட்டிச்
சித்தாந்த சிவாகமமாம் விட்டங் கூட்டி
அருளோங்கு திருப்புராண வடங்கள் பூட்டி
அன்போங்குதிருமுறையாம் பலகை மாட்டி
உருவோங்கு உபநிடதச் சிங்கந் தாங்க
ஓங்காரப் பிரணவமாம் பீட மேவிப்
திருவோங்கு நல்லொளிசேர் பதியாந் தெய்வந்
திகழ்பறாளை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். 01.

ஒத்தசுடர் ஓரிரண்டுங் குடைகள் தாங்க
ஒளிர்வாயு சாமரைகள் இரட்டி நிற்பக்
கொத்துமலர் தேவர்குழாந் தூவி ஏத்தக்
குளிர்விசிறி இந்திரனார் வீசி நிற்கச்
சித்திரமாய் அக்கினிகண் ணாடி காட்டச்
சீர்மைமிக நற்குபேரன் அடப்பை தாங்கப்
பத்திநிறை மெல்லியலார் பண்கள் பாடப்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். 02.

மந்திரஞ்சேர் மாகங்கை நீரா லாட்டி
மணியொளிசேர் பளிதநறுஞ் சாந்தம் ஆட்டிச்
சுந்தரஞ்சேர் பட்டுடுத்துப் பொருட்டு மிட்டுத்
தூயகலன் பலபூட்டித் தூபங் காட்டிக்
கந்தமலர் நறுந்தொடையல் மாலை சூட்டிக்
காந்தியொளிர் தூயதீப ஒளியுங் காட்டிப்
பந்தமெலாம் விட்டகல அருளைக் கூட்டும்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். 03.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வான்மதிதோய் சடையாட மகுடம் ஆட
மாகரிமா நுதலாடப் பட்டம் ஆடத்
தேன்மலர்சேர் செவியாடக் குழைகள் ஆடச்
செயமார்பில் உபவீதந் தாமம் ஆட
கான்மலியுங் கரமாடத் தொந்தி யாடக்
கடியவினை அடியரிடர் யாவு மோடப்
பான்மருவு மலர்ப்பாதம் ஆட ஆடும்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். 04.

மின்னனைய அரம்பையர்கள் மருங்கி லாட
மிளிர்முழவு துடிமுதலாம் நாத நீடக்
கின்னரர்நற் கிம்புருடர் இயக்கர் நாகர்
கேடில்சீர் தும்புருநா ரதர்கள் மற்றும்
கன்னலொடு தேன்பருப்புக் கலந்தே நல்குங்
கழனிவயல் உழவரெலாம் பள்ளுப் பாடப்
பன்னுமறை வேதியர்கள் பரவிப் போற்றப்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். 05.

கயமுகத்து அசுரனவன் தேவர் தம்மைக்
கணந்தோறும் வருத்தியிடர் மிகுத்த போழ்து
தயவுபுரி சிவன்உமையும் தந்தி யாகித்
தந்தனரே தந்திமுகத் தெந்தை யன்றே
நயமுடனே கயமுகனை எலியே யாக்கி
நாடோறும் நன்மையெலாம் நல்குந் தேவே!
பயமின்றிப் பழவினைகள் யாவும் ஓட்டும்
பறாளையுறை பரஞ்சோதி! ஆடீர் ஊஞ்சல். 06.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னொருநாள் உலாந்தர்கள் பறாளை நாடி
முழுவதுமே அழிவுசெய வந்தார் தேடி
மின்னலெனக் காகமெலாம் ஒன்றாய்ச் சாட
விழியழிந்து மொழிகுழறி அழுதார் ஓடி
கன்னலென அன்னவரும் அருளைக் கூடக்
காத்தளித்த கணபதியே! கருணைத் தேவே!
பன்னலஞ்சேர் பஞ்சமுகப் பரனே! கோவே!
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். 07.

அங்கைதனைச் சிரமீது பத்தர் வைத்தே
ஐந்தெழுத்தின் உட்பொருளைத் தெளியும் போழ்து
சங்கைபெறத் திரோதான சக்தி தன்னைச்
சார்தருநற் சிவசக்தி யாகச் செய்து
தங்குமவர் ஆகாமி யத்தை வீட்டிச்
சார்தருசஞ் சிதவினைகள் யாவு மோட்டிப்
பங்கயமாந் திருவருளைப் பொழியுந் தேவே!
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். 08.

மலர்மாலை தொடுத்தணிந்து துதிப்போர் ஓர்பால்
மஞ்சனநீர் பாலமுதம் படைப்போர் ஓர்பால்
அலர்கொண்டு மணிதூவி நிற்போர் ஓர்பால்
அன்பொடர கரசிவனே என்போர் ஓர்பால்
சிலர்வந்து சிலைபோல நிற்பார் ஓர்பால்
சித்தமெலாம் முத்திநலம் பெற்றோர் ஓர்பால்
பலர்புகழும் பாமாலை படிப்போ ராகப்
பறாளையுறை விநாயகரே! ஆடீர் ஊஞ்சல். 09.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்துமுகத் தைங்கரரே! ஆடீர் ஊஞ்சல்

ஆறுமுகற் கருந்துணையே! ஆடீர் ஊஞ்சல்

செந்துவர்வாய் உமைமைந்தா! ஆடீர் ஊஞ்சல்

செஞ்சடையோன் திருப்புதல்வா! ஆடீர் ஊஞ்சல்

தந்தைவலம் வந்தமைந்தா! ஆடீர் ஊஞ்சல்

தஞ்சமெனக் காத்தருள்வோய்! ஆடீர் ஊஞ்சல்

பந்தவினை நீக்குபவா! ஆடீர் ஊஞ்சல்

பறாளையுறை பரஞ்சுடரே! ஆடீர் ஊஞ்சல். 10.

## வாழி

அருமறைநல் லாகமங்கள் வாழி! வாழி!!

அருளாளர் தவநெறிகள் வாழி! வாழி!!

திருமுறைசேர் திருப்புராணம் வாழி! வாழி!!

திருநீறுங் கண்டிகையும் வாழி! வாழி!!

பெருவளஞ்செய் ஐந்தெழுத்து வாழி! வாழி!

பேருலகிற் றருமநெறி பெருகி வாழி!

ஒருமையுடன் பறாளைவிநா யகனைப் போற்றும்

உலகமெலாம் நீடூழி வாழி! வாழி!! 11.

**சித்தாந்த கலாநிதி க.கணபதிப்பிள்ளை (B.A)**
**(மகாவித்துவான் நல்லை ஞானசம்பந்தர் ஆதீனம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சுழிபுரம், கம்பனைப்பதி

# ஸ்ரீ இராசராசேஸ்வரி அம்மன்

## திருவூஞ்சல்

பொன்பூத்த ஈழமாதின் முகமே யான
  புகழ்பூத்த யாழ்ப்பாண மேல்பால் மேவும்
மன்பூத்த சிவநெறிக்கோர் திலக மான
  மாட்சிமிகு சுழிபுரநற் கம்பனையின்
மின்பூத்த சடைமௌலிப் பிரானின் தேவி
  மேன்மைமிகு இராசராசேஸ் வரியின் மீது
நன்பூத்த நல்லிசைசேர் ஊஞ்சல் பாட
  நலம்பூத்த விநாயகன்றாள் காப்ப தாமே.

### நூல்

1. திருவாரும் நால்வேதந் தூண்க ளாகச்
  சீர்பரவு சிவாகமங்கள் விட்ட மாக,
உருவாரும் உபநிடதம் வடங்க ளாக,
  ஒப்பரிய ஓங்காரம் பீட மாகக்
குருவாருந் திருவருளின் காட்சி நல்கும்
  குவலயத்தின் தனித்தாயே எங்கள் வாழ்வே
அருளாரும் கம்பனைநற் பதியில் மேவும்
  அன்னைராச ராசேஸ்வரியே ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பார்பரவு சுடர்மதியங் குடைகள் தாங்கப்
பகர்வாயு சாமரையை வீசி நிற்கப்
பேர்பரவு நற்குபேரன் அடப்பை ஏந்தப்
பெருமைமிகு வருணதேவன் நன்னீர் நல்கச்
சீர்பரவு தேவர்குழாம் மலர்கள் தூவச்
செவ்வொளிசேர் அக்கினி கண் ணாடி காட்டக்
கார்பரவு கம்பனையிற் கோயில் கொண்ட
கருணைராச ராசேஸ்வரியே! ஆடீர் ஊஞ்சல்.

3. செந்தமிழ்சேர் மந்திரநன் னீரா லாட்டிச்
செழுமைமிகு நற்சாறு பலவுங் கூட்டி
வந்தனைசெய் பட்டுடுத்துப் பொட்டு மிட்டு
வடிவழகுக் கலன்பூட்டுத் தீபங் காட்டிச்
சந்தமிகு பூமாலை பலவுஞ் சூட்டிச்
சால்புமிகு திருக்கோல அழகைக் காட்டும்
எந்தமுளம் விட்டகலா அன்னை தாயே!
எழிலாரும் ஈஸ்வரியே! ஆடீர் ஊஞ்சல்.

4. நேசமிகு பிரமதேவன் மறைகள் ஓத
நேரிழையூர் வசியரம்பை நடன மாட
ஆசையுடன் நாரதர்நற் கீதம் பாட
அரியயனார் ஆனந்த வெள்ளங் கூட
பாசமிலா முனிவரெலாம் ஆசி பேணப்
பானுமதி கோள்களெலாம் பரவி ஏத்தத்
தேசமெலாம் புகழ்கம்ப னையின் மேவும்
தேவிராச ராசேஸ்வரியே! ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சிவகணஞ்சேர் கிம்புருடர் தேவர் போற்றச்
சித்தரொடு ஞானபத்தர் முத்தர் போற்றத்
தவமுனிவர் கந்தருவர் இயக்கர் போற்றத்
தண்ணளிசேர் அந்தணர்கள் தினமும் போற்ற
நவமான விஞ்சையர்கின் னரர்கள் போற்ற
நாமகளும் திருமகளும் நாளும் போற்றப்
பவவினையைப் போக்கிக்கம் பனையில் வாழும்
பராபரைரா சேஸ்வரியே! ஆடீர் ஊஞ்சல்.

6. சீரணிசேர் நாகசுரந் தவிலும் ஆர்ப்பச்
சிறந்தசங்கு பேரிகைசேர் முரசும் ஆர்ப்ப
பாரணிசெய் சல்லரிகைத் தாளம் ஆர்ப்ப
பம்பையொடு கொம்புகண்டை பலவும் ஆர்ப்ப
ஆரணியும் அரம்பையர்கள் மருங்கே ஆர்ப்ப
ஆனைமுகன் ஆறுமுகன் அருகே ஆர்ப்பக்
காரணிசெய் பசுஞ்சோலைக் குயில்கள் ஆர்க்கும்
கம்பனைரா சேஸ்வரியே! ஆடீர் ஊஞ்சல்.

7. செந்தமிழுஞ் சிவனெறியுஞ் சிறந்தே வாழச்
சீர்மைமிகு உயர்கல்விக் கூடம் நின்றன்
சந்தமிகு வடபாலில் அன்றே தோன்றிச்
சால்புமிகு தென்பாலில் இன்றுங் காண
வந்தவகை நின்னருளின் செயலே யன்றே
வானவரும் மனமகிழக் கம்ப னையில்
எந்தமுளம் விட்டகலா திருக்குந் தேவி!
இறைராச ராசேஸ்வரியே! ஆடீர் ஊஞ்சல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. சீவரெலாம் சிவமயமாய் ஆக்குந் தேவி
சென்னமொன்றில் தெய்வீக வீடு நல்கித்
தேவரெலாம் போற்றுகின்ற வாழ்வு நல்கும்
சிதம்பரநற் றிருநடனம் தினமும் கண்டே
ஆவலுடன் அனைத்துயிர்க்கும் அன்பு நல்கும்
ஆனந்தி அடியரிடர் அனைத்தும் ஓடப்
பூவலரும் சுழிபுரஞ்சேர் கம்ப னையில்வாழ்
புகழ்ராச ராசேஸ்வரியே! ஆடீர் ஊஞ்சல்.

9. பத்திமைசேர் பண்பாடும் அடியர் ஓர்பால்
பாலமுதம் படைத்துமகிழ் அன்பர் ஓர்பால்
சித்தமெலாம் சிவசக்தி யானோர் ஓர்பால்
சிறப்புமிகு திருத்தொண்டு செய்வோர் ஓர்பால்
புத்திநிறை கல்விசெறி செல்வர் ஓர்பால்
பொருந்துகின்ற பெரும்பேறு பெற்றோர் ஓர்பால்
எத்திக்கும் புகழ்கம்ப னையில் மேவும்
எழில்ராசேஸ் வரித்தாயே ஆடீர் ஊஞ்சல்.

10. திங்களணி சிவசத்தீ! ஆடீர் ஊஞ்சல்!
சிவனருளின் திருவுருவே! ஆடீர் ஊஞ்சல்!
மங்கையுமை நாயகியே! ஆடீர் ஊஞ்சல்!
மன்னுயிர்கள் வாழ்முதலே! ஆடீர் ஊஞ்சல்!
தங்குபுகழ்க் கம்பனையைத் தலமாய்க் கொண்ட
தண்ணளிசேர் தவக்கொழுந்தே! ஆடீர் ஊஞ்சல்!
தெங்குமலி கடல்சூழும் சுழிபு ரத்தின்
திருமகள்ரா சேஸ்வரியே! ஆடீர் ஊஞ்சல்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழி

மன்னுமறை ஆகமங்கள் வாழி வாழி
மாண்புமிகு திருமுறைகள் வாழி வாழி
பன்னுதமிழ் சொல்லறங்கள் வாழி வாழி
பாருலகில் நீதிநெறி வாழி வாழி
நன்னலஞ்சேர் சிவநெறியும் வாழி வாழி
நாடுபுகழ் சிவனடியார் கூட்டம் வாழி
எந்நகரும் போற்றுசுழி புரத்து மேவும்
எழில் ராச ராசேஸ்வரி ஊஞ்சல் வாழி.

சுபம்

**ஆலய பரிபாலன சபைத்தலைவர்**

**திரு. சி. அப்புத்துரை அவர்கள்**

**விரும்பிய வண்ணம்**

**யாத்தவர்**

**சித்தாந்தகலாநிதி க. கணபதிப்பிள்ளை (பி.ஏ)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “சித்தாந்த சரபம்” என்றால் என்ன?

**சித்தாந்த பண்டிதர், வாகீசகலாநிதி**
**கனகசபாபதி நாகேஸ்வரன், எம்.ஏ**
**சிரேஸ்ட விரிவுரையாளர் மொழித்துறை,**
**சப்ரகமுவ பல்கலைக்கழகம்,**
**வெலிமுல்லோயா, இலங்கை.**

“சித்தாந்த சரபம்” என்றால் அது மெய்கண்டார் ஆதீனத்துக் குருமுதல்வர் க. கணபதிப்பிள்ளை ஐயா அவர்களையே குறிக்கும். யோனம், தானம், சீலம், தவம் என்பன உலகவர்க்குப் புரிதல் மிகமிக அரிது மனம் பற்றிய உணர்வினர்களாய் மக்கள் உலகிலே அலைவதால் ஞானநோக்கும், சாஸ்திர நுட்ப அறிவலமும், தெய்வானுடல் இயற்கை இயல்புகளையும் நோக்குவதும், நயப்பதும், காண்பதும், அனுபவிப்பதும் கூட இல்லாதோர் நிலையிலேயே உலகம் உள்ளது. இப்பேர்ப்பட்ட நிலவுலக வாழ்க்கை முறைமைக்கப்பால் பிரபஞ்ச இலக்கத்தின் சீர்மையும், படைக்கப்பட்ட அனைத்துயிர்கட்கும் தண்ணளி செய்து வாழ்விப்பதற்குமென முழுமுதற் கடவுளான சிவத்தின் பரங்கருணையினாலே உலகிலே அவதரித்தவர்கள் ஞானிகளும் இல்லறஞானிகளும் எனலாம். மக்கட் சமுதாயத்தையும் உயரிய வீடு யேற்றையும் அனைவர்க்கும் மண்ணிலே பெறுவதற்குரிய அநுக்கிரகத்தைச் சிவனருளிலையே உணர்த்துவதற்கென அவதரித்தவர்களே சமயகுரவரும் சந்தான குரவரும் அருளாளர்களுமாவர். காலத்திற்குக் காலம் தோற்றம் பெற்று ஞானநெறியை உணர்த்துவதற்காய் அவதரித்த புண்ணிய சீலர்களுள் நமது காலத்து ஞானத்தோன்றல் சித்தாந்தசரபம் க. கணபதிப்பிள்ளை ஆசிரியரும் ஒருவர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

"ஆன்மபோதம்" உயரியவற்றை உணர்த்தும் என்பதற்குச் சித்தாந்த சரபம் க. கணபதிப்பிள்ளை ஆசிரியர் தக்க எடுத்துக்காட்டாவார். வேதாந்தத்தினின்றும் வேறுபட்டது சித்தாந்தம். சித்தாந்த சாத்திர உண்மைகளின் முடிந்த முடிவான தத்துவம் சிவத்தின் தாரதம்மியம். அதுவே உண்மை விளக்கம். இத்தத்துவம் மிகமிக நுட்பமானது, மொழிக்கப்பாற்பட்டது, அநுபூதியால் உணர்த்ததக்கது, அநுபவித்துக் காணத்தக்கது. சித்தாந்த சரபம் என்பது உண்மை அநுபவத்தின் வெண்சூட்டினால் பேருண்மையான சிவம் பற்றிய ஆழமான செய்திகளை உணர்த்தும் துறை - வழி - நெறி வாழ்க்கை முறை என்று பொருளுரைக்கலாம்.

திருவருட்பயனும் , சிவஞான போதமும் பிற சித்தாந்த சாஸ்திரங்களென மிளிரும். மெய்கண்ட சாஸ்திர நெறிக்கு இலக்கணமாய் விளங்கியவர் சித்தாந்த சரபம் க. கணபதிப்பிள்ளை குரு முதல்வர். சிவதத்துவம் ஆண் பெண் பேதமற்றது. சிவதத்துவம் உய்த்துணர் கொள்கையை உறுதிபடக் கொண்டது. சிவதத்துவம் அனைத்துமையும் தனித்தாயும் மிளிர்வது. சிவதத்துவம் உயிர்கட்கு மோட்சமளிப்பது, இன்பஞ் செய்வது, துன்பத்துடைப்பது, தண்ணறியுள்ளது. சார்ந்ததன் வண்ணமாயும் ஏதமாயும் விளங்குவது எனினும் இதுதான் என்று எழுதிக்காட்டொணானது. இப்படியன் என்னாதும். இவ்வண்ணத்தன் என்னாதும் இந்நிறத்தன் என்னாதும் விளங்கும் மூலப்பொருள் சிவனே என்பதை உணர்த்துவதற்கே சித்தாந்த சரபம் என்று பெயர்.அது எல்லோரையும் இன்பமாய் வாழ வைப்பது தானும் இன்பமாய் என்றும் இயல்வது இன்னும் அறியலாம். சிந்திப்போமாக.

**அன்பன்,**

**கனகசபாபதி நாகேஸ்வரன்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

**சைவசித்தாந்த சி.வ. ஞானபூசை**
**வழிபாட்டுப் பயிற்சி நெறிப்பூர்த்தி விழா - வவுனியா**

**7.01.2001**

## பட்டமளிப்புச் சித்தாந்த பேருரை

**வழங்குபவர்**: அடியார்க்கு அடியவன்

கல்லால் நிழல்மலை வில்லார் அருளிய பொல்லார் இணை
மலர் நல்லார் புனைவரே.
இது மெய்கண்டார் விநாயக வணக்கம்.

அன்பர் பணி செய்ய எனை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை
தானே வந்தெய்தும் பராபரமே - தாயுமானவர்

இப்பேருரை சித்தாந்தப் பேருரை பட்டமளிப்புப்பேருரை என இரு பகுதிகளையும் அடங்கியதாகும்.

சைவசமய சமயகுரவர் நால்வர், சந்தான குரவர் நால்வர். இப்பயிற்சிநெறி அடியார்க்கு அடியவன் என்னும் சமயநடைமுறைப்படி, குறைந்தது நான்கு அடியவர்களை அடிப்படையாகக் கொண்டு வாரந்தோறும் 2000 ஆம் ஆண்டில் நடைபெற்றது.

திருமுறைகள் 12. சித்தாந்த சாத்திரங்களின் சூத்திரமும் 12. ஒவ்வொரு திருமுறையின் சுருங்கிய வடிவமே ஒவ்வொரு சூத்திரம் திருமுறைகள் இலக்கியம். சித்தாந்த சாத்திரங்கள் இலக்கணம். திருமுறை அன்பு - பத்திநெறி. சாத்திரம் அறிவு - புத்திநெறி. சாத்திரநெறி விஞ்ஞானஞ் சார்ந்த தத்துவசாத்திரநெறியாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே அளவையியல் - பிரமாணவியல் மிக முக்கியமாகும். ஞானசம்பந்தப் பெருமான் கல்லாமல் உணர்ந்த ஞானச் செல்வர். பாண்டி நாட்டிலே அனல், புனல் வாதஞ்செய்து வெற்றி பெற்ற அவர் தமது சோழ நாட்டிலே புறச் சமயத்தாருடன் தர்க்கவாதம் புரிய வேண்டியவரானார். அப்பொழுது தர்க்க சாத்திரங்கற்ற சம்பந்த சரணாலயர் சம்பந்தர்க்காகத் தர்க்க வாதஞ் செய்து வெற்றி பெற்றார். இது பெரியபுராண வரலாறு. இவ்வாறு தர்க்க வாதத்தால் சைவர்களை வெற்றி கொண்டவர் மணிமேகலை அம்மையார். சைவத்தை நிலைநாட்டியவர் மெய்கண்டதேவர்.

எனவே. சைவசமயத்தை நன்கு உணர்ந்து ஒழுகிப் பேரின்பமயமாகச் சித்தாந்த சாத்திரம் மிக அவசியமானதாகும் .

சைவசமயவழிபாடு குருலிங்க சங்கம வழிாடு என மூன்று வகைப்படும். பெரியபுராண நாயன்மார்களின் வழிபாட்டு வகையினை நாவலர் பெருமான் குருவை வழிபட்டு சிவஞானம் பெற்றோர், கோயிலை வழிபட்டோர். அடியார்களை வழிபட்டோர் யார் யார் என வகுத்துக் காட்டியுள்ளார். அந்த வகையில் இந்த ஞானபூசை வழிபாடும் இதற்கு முன்னர் நடைபெற்ற அனைத்தும் அடியார்க்கு அடியவன் என்னும் நிலையிலேயே பெரிதும் நடைபெற்றன. சிவ அடியார்களைச் சிவமாகக் கருதி வழிபடும் முறையை 12 ஆம் திருமுறையும் 12 ஆம் சாத்திர சூத்திரமும் நன்கு எடுத்துக் காட்டுகின்றன. சிவபக்தர்களோடு இணங்குக. அல்லாதார் அஞ்ஞானத்தை உணர்த்துவர். சிவபக்தர்களது திருவேடத்தையும் ஆலயத்தையும் பரமேசுரன் என வழிபடுக என்பது சிவஞானபோதம் 12ம் சூத்திரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவஉலகம் உலகிற்கு வழங்கிய மாபெரும் கண்டுபிடிப்பு திருவருள் என ஒரு பொருள் உண்டு என்பதாகும். இதனை மிகத் தெளிவாகத் தெரிவித்தவர் முதன்முதல் தேவாரம் அருளிய காரைக்காலம்மையாராவர். அருளே உலகெலாம் ஆள்விப்பது என்றார். அவன் அருளாலேதான் அவனைக்காணலாம் என்றார். அப்பரடிகள். இதனாலேயே திருவருட்பயன் எனத்தனியே ஒரு சித்தாத்த நூல் தோன்றுதாயிற்று திருவருளே அருட்சக்தி. திருவருளின் மற்றோர் திருவுருவமே அருட்குரு. அருட்குருவின் பார்வையால், வாக்கால், பரிசத்தால் மற்றும் தீட்சைகளால் எவரும் திருவருள் மயமாகி இவ்வுலகில் வாழும்பொழுதே பேரின்பப் பெருநிலை பெறலாம். சீவன் முத்தராக வாழலாம்.

சைவசமயத்தவர்களின் மூலமந்திரம் ஐந்து எழுத்து. அவை சி,வ,ய,ந,ம. இவை ஐந்தும் ஐந்து பதங்களாகும் என ஞானசம்பந்தர் முதலியோரும் சித்தாந்த சாத்திரங்களும் தெளிவாகக் கூறுகின்றன. சி இறைவன், வ - திருவருட்சத்தி, ய - ஆன்மா ந - தனுகரண உலகம் ம - ஆணவமலம், சி - தந்தை, பேசா எழுத்து, ஊமை எழுத்து, பெரு எழுத்து, வ - தாய் பேசும் எழுத்து, பிஞ்சு எழுத்து எனப்படும். சிவ - இரண்டும் ஞான நடனம், ஞானக்கண் எனவும், நம - இரண்டும் ஊனநடனம் ஊனக்கண் எனவும் கூறி - ய ஆகிய ஆன்மா பேரின்பப்பேறு பெற நம என்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச் சிவ என்னும் நாமத்தைச் சிந்தையுள் ஏற்ற சிவஞானம் பெறலாம் எனத் திருமந்திரம் கூறுகின்றது. எனவே ய ஆகிய ஆன்மா நம ஐ ஒடுக்கி சிவ ஐ சிந்தையில் ஏற்கவே இச் சிவ ஞானவழிபாட்டுப்பயிற்சி நடைபெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானசித்தியார் 1,ஞானநூலை ஓதல் 2, ஓதுவித்தல் 3, நற்பொருளைக்கேட்பித்தல், 4,தான்கேட்டல் 5,ஈனமிலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் ஞானபூசை என்கிறது எனவே ஞானநூலை ஓதல் கேட்டல் ஞான பூசை வழிபாடன்றோ. வகுப்பறைப் பாடப்படிப்பென்பது தவறாகும். அங்ஙனமாயின் ஏன் பாடசாலை வகுப்பறையில் நடைபெறலாயிற்று என்பது நல்லதோர் கேள்வியாகும். ஆலயங்களிலும் ஆதீனமடாலயங்களிலும் நடைபெற்ற இஞ்ஞானபூசை வழிபாடு வித்தியாலங்களிலே நடைபெற வேண்டிய சந்தர்ப்பம் மிகு சுவையானது. சுமையை நீக்கியதுமாயிற்று.

ஒருவர் யான்கண்மூடப் போகிறேன்.அதற்குமுன் சிவஞானபோதம் கேட்கவேண்டும் என்றார். அதன்படி ஆதீனத்தில் நிலத்தில் இருந்தவாறு சொல்லப்பட்டது. அதிலே கலந்து கொண்ட ஒருவர் தரையில் இருந்து கேட்பது சங்கடமாக உள்ளது என்றார். எனவே வித்தியாலயங்களிலே நடைபெறலாயிற்று. இதனால் காதால் மாத்திரம் கேட்டவை கண்ணாலும் காணத்தக்கனவாயின. இருமடங்கு வேகம் பெற்று, இங்கே வவுனியாவில் ஞான நூல் வழிபாடு அனைத்தும் தாளிலே பல்வேறு வர்ணங்களிலே ஏற்கனவே எழுதப்பெற்ற நிகழ்ந்தமையால் சிவஞான போதம், சித்தியார் சுபக்கம், சிவப்பிரகாசம் ஆகிய முதல், வழி, காப்பு, நூல்களுமன்றி மேலும் மூன்று நூல்காள் எழுத்து எழுத்தாக விளக்கப்பெற்றன. எழுதியவை ஒரு மைல் நீளம் பெறும். இச்செயலைக்கண்ட ஒருவர் இவ்வாறுதானா கல்வி கற்பித்த காலத்திலும் செய்த துண்டா எனக்கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் அவசியமான பகுதிகள் அடியார்க்கு நிழற்படப் பிரதிகளாகவும் கொடுக்கப்பட்டன. இச் சி. வ. ஞானபூசை வழிபாட்டிலே சீ என உலகோர் நாயை வெறுத்துத் துரத்துவதால் சி. நாயோட்டுமந்திரம் எனக்கூறப்பெறும் எனக்கூறி பட்டினத்தார், செல்லப்பாசுவாமிகள், சும்மா இருக்கச்சூத்திரம் எழுதிய கௌரிபாலா ஜேர்மன் சுவாமி என்போர் உதாரணம் எனச்சான்றுடன் நிறுவப்பெற்றன.

நமது வழிபாடு சிவாயநம என்பதிலுள்ள நம - சிவ ஆகி,சிவயசி ஆதலாகும் எனக்கூறி நாம் ஒரு கையால் சிவத்தையும் மறுகையால் உலகத்தையும் பிடித்துக்கொள்ள வேண்டும். அல்லாவிடில். விசர்ப்பட்டம் வந்து விடும் எனப்பற்பல உதாரமும் காட்டப்படலாயிற்று அதுவும் இயலாவிடில் சிவாயநம எனவாவது குறிப்பாக இளம் பாரயத்தனர் வாழலாம் எனவும் கூறப்பெற்றது.

அதனாலேயே முதியோர்க்கு சித்தாந்த சிவ வித்தகர் எனவும் இளைஞர்க்குச் சித்தாந்த சி,வ, அறிஞர் எனவும் பயிற்சி முடிவில் சி.வ.ப்பட்டம் கொடுக்கப்படலாயிற்று.

இனி, ஊனக்கண் ஞானம், ஞானக்கண் ஞானமாகும் முறையைச் சிறிது விளக்குவாம். கண் பார்க்கமுடியாவிடில் கண்ணாடி அணிந்து பார்க்கிறோம். இதில் கண்ணாடி ஒரு கருவி. கண் பார்ப்பதில்லை கண்ணையுடைய உயிரே பார்க்கின்றது. எனவே கண்ணும் ஒரு கருவியே. உயிருக்கு உயிராக இருந்து உயிரை ஒரு கருவியாகக் கொண்டு இறைவனாகிய மெய்ப்பொருள் தான் உயிருக்குள்ளே இருந்து பார்ப்பது நமக்கு தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு பார்க்கும் பார்வை ஞானக்கண் ஞானம் எனப்படும். இதனை "முகத்திற்கண் கொண்டு காண்கின்ற மூடர்காள்! அகத்திற் கண் கொண்டு காண்பதே ஆனந்தம்" என்றார் திருமூலர். ஆகவே சிவஞானபூசைப்பயிற்சி அகத்திற்கண் கொண்டு பார்த்த பயிற்சியே!

எமக்குள்ளே இருந்து இறைவனே காணவேண்டும், நினைக்க வேண்டும் என்பதனை நீ நினையுமாறு நினையே, காணுமாறு காணே" எனத்திருமுறைச் செல்வர்கள் விண்ணப்பித்துள்ளார்கள்.

இதன் அடிப்படையிலேயே பதவி பட்டம், பணம் எனும் "ந" அடிப்படையில் நோக்காமல் ஒருவரை ஒருவர் வணங்குவது அவர்களுக்கு உள்ளே உள்ள இறைவனை வணங்குவது அவர்களுக்க உள்ளே உள்ள இறைவனை வணங்கும் வணக்கமாகச் சைவர்களால் கொள்ளப்படுகின்றது.

இப்பொழுது மார்கழி மாதம். எங்கும் திருவெம்பாவை. மணிவாசகர் குருந்தை மரநிழலில் குரு உபதேசமாகப் பெற்ற நூல் எது? சிவஞானபோதம் அன்றோ. எனவே மணிவாசகப் பெருமானின் திருவாசகம், திருக்கோவையாரை எளிதிலே உணரயாவரும் சிவஞானபோதத்தையும் உணரவேண்டுமல்லவா? இவ்வாற்றால் சிவஞானபூசை வழிபாட்டிலே அதனைப் பெற்ற சிவநேயச் செல்வர்களின் நிலைப்பாடு எத்தகையது என நாம் உணர்வோமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சித்தமலம் அறுவித்துச் சிவமாவதே சிவஞானபூசை. "அடியார் நடுவில் இருக்கும் அருளைப்புரியாய் பொன்னம்பலத்து முடியாமுதலே" என மணிவாசகர் கூறியாங்கு அடியேன் அடியார்க்கு அடியவனாக அருளைபுரிந்த அனைவர்க்கும் நன்றி வணக்கம் உடையேன்!

சைவசமய வழிபாடு சரியை, கிரியை,யோகம், ஞானம் என நான்கு வகைப்படும் என யாவரும் அறிவர். இங்கே பயிற்சி ஞானம் பற்றியதேயாகும். ஞானவழிபாடு அகவழிபாடாகும். புறவழிபாட்டிற்குப் பூக்கள் அவசியம். அகவழிபாட்டிற்குரிய எண்மலர்கள்.

| | |
|---|---|
| 01. கொலை செய்யாமை | 02. அருளாகிய இரக்கம் |
| 03. பொறியடக்கம் | 04. பொறை |
| 05. தவம் | 06. வாய்ம்மை |
| 07. அன்பு | 08. அறிவு |

இவை எட்டுமே அகவழிபாட்டிற்குரிய எண்வகைப்பூக்கள் சிவன் எனும் மொழியைக் கொடிய சண்டாளன் கூறினாலும் அவனுடன் உறைக, பேசுக, உண்க என்பது கருதிப் பொருள் என்கிறார். சிவஞான பாடியம் அருளிய சிவஞான சுவாமிகள். திருவாசகம், இதனையே " சாதிகுலம் பிறப்பு என்னும் ஆதமிலி" என்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

63 நாயன்மார்களைச் சித்தாந்த வழிபாடு பெயரளவில் நினைவு கூர்ந்தது. ஒவ்வொரு மாதத்திலும் சிவனடியாரை வழிபட்டு முத்தி பெற்ற நாயனார் ஒருவரின் வரலாறு விரிவாக உரைக்கப்படலாயிற்று. ஒன்பான் தொகையடியார் தன்மையும் வழிபாட்டிலே பேசப்பெற்றது. இதேபோல ஒன்பதாம் பதினோராம் திருமுறைகளை அருளிய அருளாளர்கள் அவர்கள் 63 நாயன்மார்களில் இடம் பெறாதவர்கள் பற்றியும் 18 சித்தர்கள் பாடல் பற்றியும் சித்தாந்த சி. வ. ஞானவழிபாட்டில் சிந்திக்கப்பட்டன.

சித்தாந்த ஞானநெறி கல்வி அறிவினை உள்ளடக்கி அதற்கு அப்பாற்பட்ட திருவருள் நெறியாகும். கல்வி அறிவு - ந, திருவருள் ஞானம் - வ.

திருஞானசம்பந்தர் ஆதீனக் குருமூர்த்திகள் சித்தாந்தம் ஆதீனத்திலே விளக்கஞ்செய்க என்றதும் அதிலே எமது முன்னாள் ஆசிரியர், அதிபர், குடும்ப உறவைக் கைவிட்டோர், முதலில், வருகை தந்தமையால் எட்டாம் சூத்திரப்படி குருவாகாமல் 12ம் சூத்திரப்படி அடியார்க்கு அடியாராகியமையால் திருவருள் மிகவும் உதவிபுரியலாயிற்று. அதே முறையில் இவ்வழிபாட்டினையும் செய்த பொழுது பெற்ற பேரானந்த நிலை கூறொணாததாகும். அதற்கேற்றவாறு செயற்பட்ட அடியார்களை பகிரங்கமாக இங்கே இப்பட்டமளிப்பு விழாவிலே மனமாரவணங்கி எமது தற்போதும் மேலிடாமற் செய்கின்றனம்.

நூல்களை உதவிய பொதுநூலகம் வாழ்க - வளர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையிலே மெய்கண்டார் ஆதீனத்தை நிறுவிய காஞ்சி ஆதீன ஞானப்பிரகாச தேசிக பிரமாசாரியர் எமக்க நேரடியாக உபதேசித்தருளிய திருவைந்தெழுத்து உபதேசமுறையும் பிறவும் இவ்வழிபாட்டிற்கு மிகவும் உதவின. 100க்கு மேற்பட்ட ஞானநூல்கள் அறிமுகமாகின. காரணம் இன்றிக் காரியம் நிகழ்வதில்லை. எமது இச்செயற்பாட்டிற்கு நாம் மேற்கொண்ட காரணப்பெயர் அடியார்க்கு அடியவன் என்பதாகும். சர்வம் சிவமயமாகத் தோற்றம் அளிக்கும் வவுனியாத் திருநகரம் முதற்தரமாக சைவத்தொண்டர்களை நிறையப்பெற்று விளங்குகின்றது. இன்று இப்பட்டமளிப்பு அடியார்க்கு அடியேன் ஆனந்த அன்பு வணக்கம் செய்யும் நிகழ்விலே பங்குபற்றிய அனைவர்க்கும் நன்றி வணக்கம் உடையோம். விரும்பியவாறு ஆதீனத்தை ஒப்படைத்தல்.

1997 ஆண்டில் நடைபெற்றது. இன்று இங்கே கொண்டு வந்த ஞானநூல்களை அடியார்க்கு ஞானதானமாக வழங்கியமை நிறைவு பெறுகின்றது. நாற்பது வருடச் சைவப் பாதுகாப்புச் சேவை தொடரும் அடியார்கள் அருளாளர்கள் அடியார்கள் வாழ்க.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சி.வ.ஞானபூ சைப்பட்டங்களைப் பெறுகின்றவர்களின் நிழற்படங்கள்

## சித்தாந்த சி.வ.வித்தகர்கள்



கு.க.சிவக்கொழுந்து



வே.நடராசா



க.சரவணபவன்



க.இராசமணி

## சித்தாந்த சி.வ.அறிஞர்கள்



கோ.ரஜனி



சூ.சிவதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிபாட்டிற்கு ஆசிதரும் வகையில் வருகை தந்த சைவக்குருமாமணி. உயர் அரச சேவையாளர் மூவர்கள் ஆகிய நால்வர்க்கும் நன்றி. அதேபோல் இந்த விழாவிலே எமது நன்றியறிவைக்காட்டுமுகமாக அச்சிட்ட விளம்பரத்திலே இடம் பெற்ற அனைவர்க்கும் அதிலே இடம்பெறாத சற்சங்கவியாபகர் திரு. ந. செல்லையா எல்லாவற்றிற்கும் மேலாக எத்தனையோ தமது தேவைகளைத்தியாகம் செய்து இவ்விழாவிற்கும் நடைபெற்ற வழிபாடுகளுக்கும் வருகை தந்ததுமன்றி வந்தவர்களை அன்புடன் உபசரித்த கச்சியப்பமன்றத்தலைவர் சிவக்கொழுந்து , உபதலைவர் நடராசா செயலாளர் இராசமணி கவிஞர் சரவணபவன் ஆகிய நால்வர்க்கும் "நால்வர் பெற்றாள் எம் உயிர்த்துணையே" என்ற வகையில் அடியார்க்கு அடியவன் போற்றுகின்றான். நான் கெட்டவனான வழிபாடே செய்யப்பெற்றது. அதாவது இது நான் கெட்டு + அவன் ஆன வழிபாடு. சர்வம் சிவமயமே. ஒரு பொல்லாப்புமில்லை.

திருச்சிற்றம்பலம்

வணக்கம்

சிந்தாந்தத்தே சிவன் தன் திருக்கடைக் கண் சேர்த்திச்
சென்னம் ஒன்றிலே சீவன்
முத்தராக வைத்தாண்டு, மலங்கழுவி ஞானவாரி
மடுத்து ஆனந்தம் பொழிந்து வரும் பிறப்பை அறுத்து
முத்தாந்தப் பாதமலர்கீழ் வைப்பான் என்று
மொழிந்திடவும் உலகரெல்லாம் மூர்க்கராகிப்
பிந்தாந்தம் பெரும் பிதற்றுப் பிதறிப் பாவப்
பெருங்குழியில் வீழ்ந்திடுவார். இது என்ன பிராந்தி.

- சித்தியார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
திருச்சிற்றம்பலம்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

## சைவசமய சிவஞான அனுபவங்கள்

1. கடவுள் வணக்கம், வழிபாடு

விநாயகப் பெருமானை மனமுருகி வழிபட்டால் சிவஞானம் எளிதாக இனிதாகக் கிட்டும்.

இதனை " நற்குஞ்சரக்கன்று " எனத் தொடங்கும் திருவருட் பயன் குறளால் அறியலாம். சிவஞான போதத்தைத் தலைமையாகக் கொண்டுள்ள பதினான்கு சித்தாந்த சாத்திர நூல்களிலே விநாயகர் காப்புச் செய்யுள் உள்ள நூல்கள் சிவஞான போதம், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம், திருவருட்பயன் உண்மை விளக்கம் சங்கற்ப நிராகரணம் என்பன.

இவற்றுள் சித்தியார் பரபக்கம் சுபக்கம் என இரு பிரிவு. இரண்டிற்கும் "ஒரு கோட்டன்" இருசெவியன் மும்மதத்தன் எனத் தொடங்கும் திருப்பாடலே காப்புச் செய்யுள்

கல்லால் நிழல்மலை வில்லார் எனத் தொடங்கும் செய்யுள் சிவஞான போத விநாயகர் காப்பு. எமது சைவ சித்தாந்த வழிபாட்டிலும் பயிற்சி நெறியிலும் "ஒருகோட்டன்" எனதொடங்கும் சித்தியார் திருப்பாடலே முதலிடம் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிவஞான போதம் முதலியவற்றில் ஒன்றை வழிபாட்டிலே மேற்கொள்ளும் பொழுது அதற்குரிய செய்யுளை ஓதுவதும் இடம் பெறும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞான சித்தியார் பரபக்கம், சிவப்பிரகாசம் இரண்டிலும் காப்புச் செய்யுளை அடுத்துச் சிவம்,சக்தி, விநாயகர், முருகன் குரு வணக்கப்பாடல்கள் உள்ளன. அவற்றையும் ஓதுவதும் நாம் மேற்கொண்ட சைவசித்தாந்த ஞான வழிபாட்டிலே அவ்வப்போது இடம் பெற்றன.

சிவஞான போதம் சிற்றுரை திராவிட மாபாடியம் எனக் கூறப்படுகின்ற பேருரை என்பவற்றை வழிபாட்டிலே மேற்கொள்ளும் பொழுது அவ்வுரைகளைச் செய்தருளிய சிவஞான முனிவர்க்குரிய குருவணக்கத் திருப்பாடல் ஓதப் பெறும். குருவே சிவம்.

இயல்பாகவே விநாயக் பெருமானை இளமை தொடங்கி வழிபட்டமையால் அப் பெருமான் அவ்வப்போது செய்தருளிய அருள் நிகழ்ச்சிகளிலே ஒன்றாகவே சைவ சித்தாந்த ஞான பூசை வழிபாடு நிகழக் காரணம்.

சைவ சித்தாந்த சிவஞானம் பெற்று இன்புற மேற்காட்டிய வழிபாடு முக்கியமாயினும் திருமுறை வழிபாடு எமது வழிபாடு தொடங்கும் போதும், நிறைவாகும் போதும் இடம் பெற்றன என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். திருமுறை தோத்திரம் - சைவ இலக்கியம் என்றால் சித்தாந்த நூல்கள் சாத்திரம் - சைவ இலக்கணம்.

## 2. சிவஞான போதமே மூலநூல்

சைவ சித்தாந்த மூல நூல் சிவஞான போதமே. அதனை உணர மாதவச் சிவஞான முனிவர் சிற்றுரை, பேருரை என இரு உரைகளை அருளியுள்ளார். எல்லோர்க்கும் எளிதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரத்தக்க நூல் சிவஞானசித்தியார். அருணந்தி சிவாசாரியார் அருளியது. சித்தியார் பரபக்கம் பிற சமயங்களை மறுத்துரைப்பது. சுபக்கம் சிவஞான போதத்தின் விளக்கம். அதற்கோ பழமையான ஆறு உரைகள் உள்ளன.

அன்றியும் திருவிளங்க தேசிகர் உரையும் உண்டு. சித்தியார் மூல நூலிலும் உரைகள் சில கடினமானவை. வடமொழி அறிவுள்ளோரே கற்கத்தக்கவை. சித்தியார் மூல நூல் இலக்கியச் சுவையுடையது. எமது சிவஞான வழிபாட்டுப் பயிற்சியிலே சிவஞான போதமே மூல நூல். உரை விளக்க நூலாகச் சித்தியார் சுபக்கம், சிவப்பிரகாசம் முதலியன இருந்தன.

சிவஞான போதத்திற்கு முதல் உரை செய்தவர் மெய்கண்டாரே. அவரே சிவஞான போதத்தைத் தமிழிலே பன்னிரண்டு சூத்திரமாகச் செய்தருளியவருமாவார்.

சிவஞான போதம் பன்னிரண்டு சூத்திரம், நாற்பது அடி. இருநூற்றுப்பதினாறு சொற்கள். அறுநூற்று இருபத்து நான்கு எழுத்துக்கள். உலகிலே அளவாற் சிறுய பொருளாற் பெரிய ஞான நூல் சிவஞான போதமே. இது தமிழ் மொழிக்கே சிறப்பு. பன்னிரண்டு சூத்திரமும் பன்னிரண்டு திருமறைகளின் சாரம் - சுருக்கம் என்பர்.

சூத்திரம் என்பது செய்யுளில் ஒரு வகையான நூற்பா. சூத்திரம் சில எழுத்திலே பல பொருளை தெரிவிக்கும் செய்யுளாகும். பதினான்கு சாத்திரங்களிலே சூத்திரயாப்பினால் இயற்றப் பெற்றுள்ள ஒரே நூல் மெய்கண்டார் அருளிய சிவஞானபோதமே. ஏனையவற்றிலுள்ள சூத்திரங்கள் சூத்திரயாப்பினால் செய்யப்பட்டில என்பதும் மனங்கொள்ளத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. சிவஞான போதச் சூத்திரச் சிறப்பு

ஒவ்வொரு சிவஞானபோத சூத்திரமும் அதிகரணம் என முதலில் பகுக்கப்பட்டு அதற்கு மேற்கோள் ஏது உதாரணம் உள்ளடக்கிய வார்த்திகப் பொழிப்புரை மெய்கண்ட தேவரே செய்தருளியுள்ளார். அதிகரணம் - சூத்திரக் கூறு. இதனை கண்ணழிவுரை எனவும் கூறுவர்.

சூத்திரம் ஒவ்வொன்றிற்கும் வார்த்திகப் பொழிவுரை கூறு முன் மெய்கண்டார் கருத்துரை என்னும் உரையையும் தந்துள்ளார்.

எனவே ஒவ்வொரு சூத்திரத்திற்கு மெய்கண்டார் கருத்துரையும் வார்த்திகப் பொழிப்புரையும் என இருவகை உரை தந்தருளியுள்ளார். முதலில் சூத்திரம் அடுத்துக் கருத்துரை பின்வருமாறு இடம் பெறும்.

அவன். அவள் அது எனும் அவை மூவினைமையின் தோற்றிய திதியே ஒடுங்கி மலத்து உளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர் என்பது சூத்திரம் கருத்துரை அடுத்துக் கருத்துரை என்னுதலிற்றோவெனின் சங்கார காரணனாய் உள்ள முதலையே முதலாக உடைத்து இவ்வுலகம் என்பது உணர்த்துதல் நுதலிற்று. கருத்துரை செய்யுளன்று. மெய்கண்ட தேவரின் வசனம்.

இவ்வாறு பன்னிரண்டு சூத்திரத்திற்கும் பன்னிரண்டு வசனக் கருத்துரை தந்துள்ளார் மெய்கண்டதேவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 4.சிவஞான போத அமைப்பும் சிறப்பும்

சைவசித்தாந்தத்தை நன்கு உணர்ந்து சிவஞானப் பேரின்ப வாழ்வு வாழச் சிவஞானபோத அமைப்பையும் சிறப்பையும் தெளிவாக உணர்வது மிக அவசியமாகும்.

சிவஞானபோதம் சித்தியார் பன்னிரண்டு சூத்திரமாகப் பகுக்கப்பட்டிருப்பினும் முதல் ஆறும் பொது இயல்பையும் பின் ஆறும் சிறப்பியல்பையும் விளக்குவன. சிறப்பியல்புக்கு மற்றோர் பெயர் உண்மை இயல்பு இயல்பை அதிகாரம் எனவும் கூறுவதுண்டு. பொது அதிகாரத்தில் முதல் மூன்று சூத்திரமும் பிரமாண இயல். பின் மூன்றும் இலக்கண இயல். சிறப்பு - உண்மை அதிகாரத்தில் முதல் மூன்றும் சாதன இயல். பின் மூன்றும் பயன் இயல். பதி,பசு,பாசம், ஆகிய முப்பொருள்களும் உண்டு எனவும்.

அவற்றின் தன்மைகள் எவை எனவும் பொது அதிகாரம் கூறுகின்றது. ஆனால் சிறப்பதிகாரம் சீவன் சிவமாவதற்குரிய சாதனை பற்றியும். பயன் பற்றியும் கூறுகின்றது. இவ்வாற்றால் பின்னுள்ள சிறப்பதிகாரம் ஆகிய உண்மை அதிகாரமே சிவஞான சாதனையையும், பயனையும் கூறுகின்ற உண்மையான சிவஞானப் பகுதி என எளிதிலே புலனாகும்.

பொதுவாக கற்கின்றோருக்கு முதலிலிருந்து இறுதிவரை கற்றுப் புலமை பெறுவது வேறு. கற்றபடி ஒழுகிச் சாதனை புரிந்து பயன் பெறுபவர்க்கு பின்னுள்ள சிறப்பதிகாரம் எனும் உண்மை அதிகாரமே உயிர் போன்றதாகும். மிகமிக உயர்வானதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானபோதம் சிவஞானசித்தியார் இரண்டுமன்றிச் சிவப்பிரகாசமும் பொது - உண்மைப பகுப்பினை வலியுறுத்தியுள்ளது. எனவே அன்பர்களுக்கு யாம் சைவசித்தாந்தத்தை விளக்கும் போது பாயிரத்தை அடுத்துப் பயனியல், சாதனவியலைச் சிவஞான வழிபாட்டுப் பயிற்சியிலே மேற்கொள்ளுவது நடைபெறலாயிற்று. பன்னிரண்டு சூத்திரமும் பன்னிரண்டு திருமுறையைக் குறிக்கின்றன என்பர். இதனால் பன்னிரண்டாம் திருமுறையாகிய திருத்தொண்டர் புராணமாகிய பெரிய புராணச் சூத்திரமே பன்னிரண்டாம் சூத்திரமாகும். அது குரு - லிங்க - சங்கம வழிபாட்டை வலியுறுத்துவதாகும்.

எட்டாம் சூத்திரம் ஆகிய எட்டாம் திருமுறை மாணிக்க வாசகரின் திருமுறை. இறைவன் குருவாக வந்து உபதேசிக்கும் திருமுறையும் சூத்திரமும் அதுவாகும். ஆரம்பத்தில் அடியேன் குரு அல்லேன். எனவே சைவசித்தாந்த சிவஞானத்தை உபதேசிக்கப் பன்னிரண்டாம் திருமுறையே வழிகாட்டியது. அது சிவனடியார்களைச் சிவனாகக் கொள்ள வைத்தது.

சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரக் கருத்துரை

"அசிந்திதனாய் நின்ற பதியைச் சிந்திதனாய்க் கண்டு வழிபடுமாறு உணர்த்துதல். இறைவன் சிந்தனைக்கு அப்பாற்பட்டவன். மனவாசகம் கடந்தவன். அவனைச் சிந்தனைக்கு உரியவனாகக் கண்டு வழிபடும் வகையைக் கூறுவது இச் சூத்திரம். இச்சூத்திரம் நாலு அதிகரணம் உடையது. எனவே நான்கு சூரணி வசனங்கள் உள்ளன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையாவன:

- ⋆ மும்மலங்களையும் களைக.
- ⋆ சிவஞானிகளுடனே கூடுக.
- ⋆ சிவஞானிகளையும் சிவலிங்கத்தையும் சிவன் எனவே
- ⋆ தேறி வழிபடுக.
- ⋆ வழிபடாமையை ஒழிக. (அதாவது குருலிங்க சங்கம
- ⋆ வழிபாட்டினைக் கைவிடலாகாது)

**சிவஞானபோதப் பன்னிரண்டாம் சூத்திரத்தைச் சிவஞானசித்தியார் பின்வருமாறு உரைக்கின்றது.**

"செங்கமலத் தாள் இணைகள் சேரல் ஒட்டாத்
திரிமலங்கள் அறுத்து ஈசர் நேசர் ஒடும் செறிந்திட்டு
அங்கு அவர் தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
அரன் எனவே தொழுது இறைஞ்சி ஆடிப் பாடி
எங்கும் யாம் ஒருவர்க்கும் எளியோம் அல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்று இறுமாப்பு எய்தித்
திங்கள் முடியார் அடியார் அடியோம் என்று
திரிந்திடுவர் சிவஞானச் செய்தி உடையோரே"

ஆகவே அடியார்க்கு அடியவன்" என்னும் காரணப் பெயரிலேயே சிவஞானபோத வழிபாட்டினை நிகழ்த்தலானோம். இனி சிவஞானபோதச் சூத்திரத்தைக் காண்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால் அற நேயம் மலிந்தவர் வேடமும்
ஆலயம் தானும் அரன் எனத் தொழுமே"

இது சிவஞானபோத 12ம் சூத்திரம். இதனைச் சிவப்பிரகாசம் பின்வரும் செய்யுளாகக் கூறுகின்றது.

தொண்டர்கள் தாமும் வானோர் தொழும் திருமேனி தானும்
அண்டர்கள் கண்டிலாத அண்ணலே! ஏன வணங்கி
வெண் தரளங்கள் சிந்த, விழி மொழி குழற மெய்யே கண்டு
கொண்டு இருப்பர் ஞானக் கடல் அழுது அருந்தினோரே.

## 5. சிவஞானபோத வெண்பாக்களின் சிறப்பு

சிவஞான போதத்தைக் கற்று, உணர்ந்து கடைப்பிடிக்கப் பல்வேறு வழி வகைகள் உள. அவற்றில் ஒன்று

* பன்னிரண்டு சூத்திரப்ப பொருளைகருத்தை உணர்தல் .
* சூத்திரக் கருத்துரை பன்னிரண்டையும் உணர்தல்
* ஏது மேற்கோள் இரண்டையும் ஒன்றாக உணர்தல்
* உதாரண வெண்பாக்கள் 81ஐயும் உணர்தல்.

முதலியன. இவற்றுள் முதற்சூத்திர முதல் வெண்பா பேதாய் எனச் சீடனைக் கூறி இறுதிச் சூத்திர இறுதி வெண்பாவிலே சிவம் என்னும் அந்த தர என்கிறது. இதற்கு மாதவச் சிவஞான முனிவர் எழுதிய சிற்றுரை சீவன் என்னும் இயல்பின் நீங்கிச் சிவம் என்று ஓதப்படும் வேதாந்தத் தெளிவாகிய சித்தாந்தத்தை உடைய மாணவகனே என்பதாகும். யாம் குரு நிலையில் நின்று உபதேசித்த பொழுது உபதேசம் பெற்றவர்களுக்குச் சிவம் என்னும் சிறப்புரை அவர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெயருடன் இணைத்தனம். நாமும் சிவம் என்னும் பெயரையும் பெற்றனம்.

இதனை சிவஞானசித்தியார் நிறைவு செய்யுளிலே அருட்குருவை வழிபடச் "சிவமே" ஆக்கும் என்கிறது. சீவன் சிவமயமாதலே சிவஞானம்.

## 6. எட்டாம் சூத்திரத்தின் முக்கியத்துவம்

எட்டாந் திருமுறை மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகம் திருக்கோவையார். சிவபரம் பொருளே குருவாக எழுந்தருளி மாணிக்கவாசகர்க்குச் சிவஞான போதத்தை உபதேசித்தவர். அதன் பெறுபேறெ எட்டாந் திருமுறை ஆயிற்று. கந்த புராணத்திலே வள்ளியம்மை திருமணப்படலம் மிகச் சிறப்பு வாய்ந்தது. அதன் மறு வடிவமே சிவஞான போதம் எட்டாவது சூத்திரமும் எட்டாம் திருமுறையுமாகும்.

"ஐம்புல வேடரின் அயர்ந்தனை வளர்ந்து எனத்
தம்முதல் குருவும் ஆய்த் தவத்தினில் உணர்த்த விட்டு
அந்நியம் இன்மையின் அரன் கழல் செலுமே"

என்பது எட்டாம் சூத்திரம். "அரன் எனத் தொழுமே 12ம் சூத்திரம் 8ம் சூத்திரமும், 11ம் சூத்திரமும் அரன் கழல் செலுமே என்கின்றன. இரண்டும் சிவப் பேறு - சிவபதப் பேறு கூறுகின்றன. இவ்வாற்றால் எட்டாம் சூத்திரத்திரமே சிவஞானப் பேறு நல்கவல்லது என்பது குறிப்பு. சித்தியார் "மலர் அடிக்கீழ் வைப்பன்" எனப் பின்வரும் செய்யுளிலே கூறுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மன்னவன் தன் மகன் வேடர் இடத்தே தங்கி வளர்த்து அவனை அறியாது மயங்கி நிற்பப் பின் அவனும் "என் மகன் நீ என்று" அவரில் பிரித்துப் பெருமையொடும் தான் ஆக்கிப் பேணுமா போல் துன்னிய ஐம்புல வேடர் சுழலிற் பட்டுத் துணைவனையும் அறியாது துயர் உறும் தொல் உயிரை மன்னும் அருட்குரு ஆகி வந்து அவரின் நீக்கி மலம் அகற்றித் தான் ஆக்கி மலரடிக் கீழ் வைப்பன்.

ஒரு கதை போல - நாடகக் காட்சி போல ஐம்புல வேடர்களிடையே அகப்பட்ட சீவனைச் சிவனாக்கும் சிவஞான வித்தையை எட்டாம் சூத்திரம் கூறுகின்றது.வள்ளியம்மை திருமணத் தத்துவமும் இதுவே. இச் சூத்திரம் முதல் இறுதி வரை திருநாவுக்கரசரின் திருத்தாண்டகம் போல மிக இனிமையாக சித்தியார் அமைந்துள்ளது. சிவஞான போதத்தை உணர்ந்து சிவஞானப் பெறும் பேறு பெறச் சிவஞான சித்தியார் எட்டாம் சூத்திரம் மிகவும் துணைபுரிகின்றது.

" பார் விரித்த நூல் எல்லாம் பார்த்தறியச் சித்தியாரில் ஓர் விருத்தப் பாதி போதும் எனவும், பாதி விருத்தத்தால் பார் விருத்தமாக உண்மை சாதித்தார் எனவும் பலவாறு சிவஞானிகள் போற்றக் காரணம் இச் சூத்திரமே. எட்டாஞ் சூத்திரத்தை முதன்மையாகக் கொண்டு சிவஞானசித்தியார் வழியாகச் சிவஞானபோதத்தை உணர்தல் மிக எளிதாகும். இவ்வகையில் சிவப்பிரகாசம் உண்மை இயல்பு அதிகாரம் மூன்றாம் சூத்திரத்துடன் ஆரம்பமாகின்றமை மனங் கொள்ளத் தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானசித்தியாரில் தீட்சை விளக்கம் எட்டாஞ் சூத்திரத்தில் இடம் பெற்றுள்ளது. ஆனால் சிவப்பிரகாசத்தில் நூலுக்கு முன் பாயிரத்திலே தீட்சை விளக்கம் உள்ளது. சரியை கிரியை யோகம் செலுத்திய பின் ஞானத்தால் சிவனடியைச் சேரும் முத்தி செப்புவது இங்கி யாமே எனவும் ஞான நூல்களை ஓதல், ஓதுவித்தல், நற்பொருளைக் கேட்பித்தல், தான் கேட்டல் நன்றாம், ஈனம் இலாப் பொருளதனைச் சிந்தித்தல் ஐந்தும் இறைவனடி அடைவிக்கும் எழில் "ஞான பூசை" எனவும் கூறுகின்றது.

"குருவால் ஞான நிட்டை அடைந்தவர் அடைவர் நாதன் தாளே" எனவும் சிவஞானப் பேரின்பப் பேறும் எட்டாஞ் சூத்திரக் குரு அருளாலே நிகழும் என்கின்றது சித்தியார். அவ்வாறு சிவப்பேறு பெறாதவர்களுக்கே ஒன்பது முதலிய சூத்திரங்கள் செய்யப் பெற்றன என்கின்றது சித்தியார். ஆசையொடும் அங்கும் இங்கும் ஆக அலமருவோர் அரும் பாசம் அறுக்கும் வகை அருளின் வழி உரைப்பாம் என ஒன்பதாஞ் சூத்திரத்தை அறிமுகம் செய்கின்றார் அருள் நந்தி சிவாசாரிய சுவாமிகள்.

## 7. ஒன்பதாம் சூத்திரத்தின் சிறப்பு

அரன்கழல் செலுமே என்பது எட்டாம் சூத்திரம், அதன் கருத்துரை ஞானத்தினை உணரும் முறைமை. முதல் அதிகரணம் முன் செய் தவத்தால் ஞானம் நிகழும் என்கிறது.இரண்டாம் அதிகரணம் முதல்வனே குருவாக உணர்த்தும் என்பது. மூன்றாம் அதிகரணம் ஐம்புல உணர்வால் மயங்கிய ஆன்மா தன்னை உணராது என்பது. நான்காம் அதிகரணம் ஆன்மா இந்திரியங்களின் வேறாகத் தன்னைக் காணுமாயின் அது இறைவன் பாதத்தை அணையும் என்பது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தன்னை உணர்ந்து இறைவனை அடையப் பஞ்சேந்திரியங்கள் தடையாக இருக்கும் ஆன்மாக்களுக்குப் பேரின்ப பெறத் திருவைந்தெழுத்து உதவும் வகையை ஒன்பதாம் சூத்திரம் விளக்குகின்றது. அது வருமாறு

"ஊனக்கண் பாசம் உணராப் பதியை
ஞானக் கண்ணில் சிந்தை நாடி
உராத் துனைத் தேர்த்து எனப் பாசம் ஒருவத்
தண் நிழலாம் பதி.விதி எண்ணும் ஐந்து எழுத்தே"

உயிர்தன்னைத் தூய்மைப்படுத்தும் வகையை இச் சூத்திரம் உரைக்கின்றது. இது ஆன்ம சுத்தி. ஊனக்கண் - உடலின் புறத்தே உள்ள கண். ஞானக்கண் - உடலின் அகத்தே உள்ள கண். திருவருட்கண். முகத்திற்கண் கொண்டு பார்க்கின்ற மூடர்காள் அகத்திற் கண் கொண்டு பார்ப்பதே ஆனந்தம்" என்கிறார் திருமூல தேவநாயனார். பொருள்களை கண்ணால் பார்க்கின்றோம். ஆனால் இயலாவிடின் கண்ணாடி அணிந்து பார்க்கின்றோம். உண்மையில் கண்ணோ கண்ணாடியோ பார்க்கவில்லை. ஆன்மா ஆகிய உயிரே பார்க்கின்றது என்கின்றோம். உயிரும் பார்க்கவில்லை. உயிருக்குள் உயிராய் இருக்கின்ற இறைவனே பார்க்கின்றான் என்பதே சிவஞானம்.

நாமோ, நம் கண்ணோ, நாம் அணியும் கண்ணாடியோ பார்க்கவில்லை. எமது உயிருக்குள்ளே உயிராக இருக்கின்ற இறைவனை எமக்குள் இருந்து பார்க்கின்றான் என்னும் உணர்வு ஏற்பட்டால் அதுவே ஞானக்கண் பார்வையாகும். ஒன்பதாம் சூத்திரம் மூன்று அதிகரணங்களை உடையது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் அதிகரணச் சூரணி -- உயிர் அரன் ஞானத்தினாலேயே அரனைக் காணும் (ஞானம் திருவருள்) இரண்டாம் சூரணி - உயிர் பாசப் பொருள்களிலே பற்று அற்றால் அரன் வெளிப்படுவான். மூன்றாம் சூரணி - பஞ்சாட்சர செபம் செய்தால் வாசனாமலம் போகும். சூரணி செய்தவர் மெய்கண்டார் அல்லர்.

இந்த இடத்தில் சிற்றுரையிலே சிவஞான முனிவர் எழுதியவற்றைக் காண்போம். பஞ்சாக்கரம் என்பது முத்தி பஞ்சாக்கரம் (சிவ) அறிவால் கணித்தலே ஈண்டு உச்சரித்தல். உண்மை விளக்கம் சிவப்பரகாசம், திருவருட்பயன், கொடிப் பாட்டு, நெஞ்சு விடுதூது முதலியவற்றுள் இதன் இயல்பெல்லாம் காண்க என்றார்.

அணைந்தோர் தன்மைக்க முன் ஆன்ம லாபத்தின் பின் அஞ்செழுத்து அருள் நிலையைப் புடை நூலாசிரியர் வைத்துள்ளார். எனக் குறிப்பிட்ட சிவஞான முனிவர் ஞான சொருபத்தை பூரண நிலையில் கொண்டு செல்லும் சிறந்த சாதனம் பஞ்சாக்கரம் என்பதால் சாதனவியல் வைக்கப் பட்டுள்ளமையை ஏற்கின்றார். புடைநூலாசிரியராகிய உமாபதி சிவனார் தமது சிவப்பிரகாசத்தைப் பொது - சிறப்பு இயல்பு என இரு வகைப்படுத்தினாரேயன்றிச் சாதனவியல் பயனியல் எனப்பகுத்திலர். எனவே அவர் செய்தமை மாறன்று என்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 8. திரு ஐந்தெழுத்து சிவஞானம் தரும் முறைமை

திருவைந்தெழுத்து ஸ்ரீ பஞ்சாட்ரம். சிவஞானபோதம், சித்தியர், சிவப்பிரகாசம், திருவருட்பயன் உண்மை விளக்கம் முதலிய சைவ சித்தாந்த நூல்களும் தேவாரம், திருவாசகம், திருமந்திரம் முதலிய தோத்திர நூல்களும் ஐந்தெழுத்துப் பற்றி மிகவும் சிறப்பாக கூறுகின்றன. தோத்திரத்திற்கும், சாத்திரத்திற்கும் உள்ள வேறுபாடு உணர்ந்தால் திருவைந்தெழுத்தைத் தோத்திரமுறையில் ஓதுவதும் சாத்திர முறையில் ஓதுவதும் புலனாகும்.

இது பற்றிய விளக்கம் தனிநூலாக வெளியீடு செய்துள்ளனம்.

அன்பேசிவம். அறிவும் சிவமே

இங்ஙனம்

அடியார்க்கு அடியவன்.

ஞானப்பிரகாசசிவம்.

சைவப் பாதுகாப்பு - சமயசமரச சேவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தெழுத்து சி.வ.ஞானந் தரும் முறைமை

## ஓர் அனுபவ விளக்கம்

விநாயகப் பெருமான் ஓங்காரவடிவினன். அவர்க்கு முதல் வணக்கம் செய்வது சைவ சமய மரபு. ஓம் எனும் ஓங்காரத்துள் இறை சக்தி, பாசம் எழில் மாயை ஆவி எனும் ஆன்மா உற நிற்கும் என்பது திருவருட் பயன். ஓங்காரத்தில் சிவம், சக்தி, மலம், திரோதானம் ஆன்மா ஆகிய ஐந்தும் பொருந்தி நிற்கின்றன. இவை ஐந்து பொருள்கள். ஐந்து எழுத்தால் குறிக்கப்படுவதனால் அஞ்செழுத்து = ஐந்தெழுத்து = பஞ்சஅட்சரம் எனப் பெயர். ஐந்தின் பொருள்நூல் வேத ஆகமங்கள் ஊனநடனம் ஒருபால், ஒரு பாலாம் ஞானநடம், தான் நடுவே நாடு என்பது திருவருட் பயன். ஊன நடனம் - நம, ஞான நடனம் சிவ, நடுவேய எனும் ஆன்மா.

ஒவ்வொரு எழுத்தும் ஒவ்வொரு பொருளையே குறிக்கும். சி- சிவம், வ- சிவசக்தி, ய - ஆன்மா, ந- திரோதான மறைப்புச் சக்தி ஆகிய மாயை. ம- ஆணவ மலம். மலமும் (ம) திரோதான சக்தியும் (ந) நீங்க ஊனநடனம் நீங்கி விடும் அந்நிலையில் சார்ந்ததன் வண்ணமாகிய ஆன்மா திருவருளால் (வ) சிவத்தோடு (சி) சேர்ந்துவிடும். (வா = சிவசக்தி) சி (சிவத்தைக் காட்டி) அதைய = ஆன்மாவை) வாழ்விக்கும் என்பது மற்றோர் திருவருட் பயன் குறள். ஆன்மா வா சி இடை நிற்கை வழக்கு என்பது மற்றோர் திருக்குறள். நம் நாட்டிலே உயர்தர வகுப்பிலே திருவருட்பயன் பாட நூலாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குச் சைவப் பொரியார் சிவபாத சுந்தரனார் எழுதிய உரை மிகச் சிறந்தது. அதிலே அவர்கள் சிலர் பஞ்சாட்சர செபத்தினாலும் ஒரு பயனும் அடையவில்லை என்று சொல்லுகின்றார்கள் என எழுதியுள்ளார். எனவே நாற்பது வருடச் சைவ சித்தாந்த போதனையிலே பெற்ற அனுபவத்தை ஒரு விரிந்த அனுபவ நூலாகத் தருகின்றனம்.

தன் நிலைமை மன் உயிர்கள் சாரத்தரும் சக்தி பின்னம் இலான் எங்கள் பிரான் என்பது திருவருட் பயன். இறைவன் தனது தன்மையை ஆன்மாக்கள் யாவும் பெறும் படி செய்யும் திருவருட் சக்திக்கு வேறாகாதவர் எங்கள் கடவுள் சிவபெருமான் என்பது பொருள். திருவருள் என ஒரு பொருள் - பண்டம் இருக்கிறது என்பதை மிகத் தெளிவாகக் கூறியவர் காலத்தால் முற்பட்ட காரைக்காலம்மையார் ஆவார். அருளே உலகெல்லாம் ஆள்விப்பது என்றார் அவர். சிவன் (சி) சக்தியோடு (வ) பின்னமிலான் - வேறாகாதவன். திருவருளே (வ) கண்ணாகக் காணின் இறைவனைக் (சி) காணலாம் என்பது தேவாரம்.அவன் அருளே கண்ணாகக் காணல் இது.

ஐந்து எழுத்திலே சி.வ. மிக முக்கியம். ஐந்து பொருளில் இரண்டு பொருள் முக்கியம். ஆன்மா ஆகிய உயிர்களுக்கு (ய) சிவ.ஞானம் பெற நம ஆகிய திரோதானமும் ஆணவமும் அகலல் வேண்டும். வலி குன்றல் வேண்டும். இதனை காலத்தால் முற்பட்ட திருமந்திர மாலை அருளிய திருமூல தேவநாயனார் பின்வரும் திருமந்திரத்திலே தெளிவாக்கி உள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நம என்னும் நாமத்தை நாவில் ஒடுக்கிச் சி.வ என்னும் நாமத்தை சிந்தையுள் ஏற்றப் பவம் அது தீரும் பரிசும் அதற்றால் அவமதி தீரும் அறும் பிறப்பு அன்றோ" பிறப்பு அறும் - பேரின்பம் சிவானந்த நிலை ஏற்படும். நான்கே நான்கு திருப்பாடலை உடைய உமாபதி சிவாசாரியார் அருளிய கொடிக் கவியின் நான்காம் பாடல் அஞ்சு எழத்தும் எட்டு எழுத்தும் ஆறு எழுத்தும் நால் எழுத்தும் பிஞ்சு எழுத்தும் மேலைப் பெரு எழுத்தும் - நெஞ்சு அழுத்திப் பேசும் எழுத்துடனே பேசா எழுத்தினையும் கூசாமற் காட்டக் கொடி.

பிஞ்செழுத்து - வ = சிவசக்தி, பெரு எழுத்து சி = சிவம். பேசும் எழுத்து - வ.பேசா எழுத்து - சி அது ஊமை எழுத்து. உமாபதி சிவனார் திருவருட் பயனில் திருவைந்து எழுத்து விளக்கத்தை ஓர் அதிகாரமாகத் தந்துள்ளார். கொடிக்கவியில் நாலில் ஒன்று நெஞ்சுவிடு தூதில் உமாபதி சிவனார் பின்வருமாறு கூறுகின்றார்.

நாடரிய அஞ்சு எழுத்தின் உள்ளீடு அறிவித்தான் அஞ்செழுத்தை நெஞ்சு அழுத்தி நேயமயலாக்கி அஞ்செழுத்தை உச்சரிக்கும் கேண்மை உணர்த்தி அதன் உச்சரிப்பு வைத்திருக்கும் அந்த வழியாக்கி அச்சம் அறச் சென்று விளக்கை எழத் தூண்டி .............. கள்ளம் மறப்பித்தான் மெய்ஞ்ஞானம் ஆக்கி மனம் எல்லாம் இறப்பித்தான் மெய்ஞ்ஞானம் ஆக்கி மனம் எல்லாம் இறப்பித்தான் என் பிறிவி ஈத்தான் யார்? உமாபதிசிவா சாரியாரின் ஞானகுருவாகிய மறை ஞானசம்பந்தர். சிவமே ஞானகுரு. ஞானகுருவே சிவம். திருக்கைலாச ஞானப் பரம்பரையில் வந்தவரே..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமூலர், மெய்கண்டார், சைவஆதீனப் பரமாசாரியார்கள். இந்த வகையில் இலங்கைத் திருநாட்டிற்கு எழுந்தருளி வந்த பஞ்சாட்சர சிவ ஞான உபதேசஞ் செய்து எம் போன்றோரைச் சிவானந்தம் பெறச் செய்ததுமன்றி மெய் கண்டார் திருப்பெயரில் சிவஞானப் பயிர் வளர ஆதீன சீலத் திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகளாவார்.

| சி | வா | ய | ந | ம |
|---|---|---|---|---|

என ஐந்து எழுத்தையும் 5 நிறங்களிலே எழுதி ஐந்து பொருள்கள் என எல்லோர்க்கும் எளிதிலே விளங்கத்தக்கதாக சிவ ஞானத்தை நல்கினார்.

நம ஊன நடனம் = உலக போகம் = ஊனக்கண். சிவ ஸ்ரீ ஞான நடனம் = சிவபோகம் = ஞானக் கண். சிவப்பிரகாசம் உமாபதி சிவசாரியாரின் மற்றோர் நூல். சிவஞானிக்க உடல் உறு நுகர்வும் உற்றிடும் வினையும் இடர்பட பஞ்சாட்சர தரிசனம் ஆகிய ஐந்துதெழுத்து அருள் நிலை வேண்டுமெனக் கூறி அருளிலே உட்பட்டவர்களுக்குச் சி.வ முன்னாக உச்சரிக்கவும்.

வா சி யை அருளும் ஆன்மா ஈசனில் ஏகம் ஆகும். இது திரு எழுத்தின் ஈடே என்கிறது. சிவஞான போதம் சிவஞானசித்தியார் இரண்டிலும் திருவைந்தெழுத்து பற்றிய விளக்கம் உண்மை அதிகாரத்திலே சாதன இயலிலே ஒன்பதாஞ் சூத்திரத்தில் இடம்பெற்றுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஊனக்கண் பாசம் உணராப்பதியை ஞானக்கண்ணில் சிந்தை நாடி உராத் துனைத் தேர்ந்து எனப் பாசம் ஒருவத் தன் நிழலாம் பதி விதி எண்ணும் அஞ்செழுத்தே" என்பது சிவஞானபோதம்.

"பாசஞானத்தாலும் பசு ஞானத்தாலும் பார்ப்பரிய பரம்பரைப் பதி ஞானத்தாலே நேசமொடு உள்ளத்தே நாடிப் பாத நீழற் கீழ் நில்லாதே நீங்கிப் போதின் ஆசை தரும் உலகம் எலாம் அலகைத்தேராம் என்று அறிந்து அகல அந்நிலையே ஆகும். பின்னும் ஓசைதரும் அஞ்செழுத்தை விதிப்படி உச்சரிக்க உள்ளத்தே புகுந்து அளிப்பன ஊனம் எல்லாம் ஓட" என்பது சிவஞான சித்தியார்.

பாசஞானம் = நம பசு ஞானம் = ய. பதிஞானம் சிவ. உலகம் = ந. ஓசைதரும் (வ) அஞ்செழுத்து = வ. ஊனம் எல்லாம் = நம. பஞ்சாக்கர விளக்கம் மெய்கண்ட தேவரின் நேர் மாணவர் மனவாசகங் கடந்த தேவர் அருளிய உண்மை விளக்கத்திலே சிறப்பாக விளக்கம் பெற்றுள்ளது. அந்நூல் எளிமை, இனிமை உள்ளது.கைந்நூலாகக் கொள்ளத்தக்கது. அதற்கு இனிய தெளிவான உரைசெய்தவர் ஞானப்பிரகாச பரமாசாரியார்.

ஊனநடனம் = 2ஞானநடனம், 3நாதாந்த நடனம், 4 பஞ்சகிருத்தியநடனம்,5ஞானத்தின்ஞான நடனம் எனப்பற்பல ஐந்தெழுத்து விளக்கம் அந்நூலில் உள்ளன. நடராசாப்பெருமானின் திருவுருவத்தின் கீழே தோற்றம் துடியதனில்.... என்னும் பஞ்சகிருத்திய நடனப் பாடலையே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும்பாலானோர் பதித்துள்ளனர். ஞானத்தின் ஞானப்பாடல்கள் என மூன்று உள்ளன. அவற்றில் ஒன்றையாவது பதிப்பித்தலே சிவஞானமாகும். ஒன்றைக் காண்போம்.

"மாயை (ந) தனை உதறி வல்வினையைச் சுட்டு,மலம் (ம) சாய அமுக்கி, அருள் (வ) தான் எடுத்து நேயத்தால் ஆனந்தவாருதியில் (சி) ஆன்மாவை (ய) த்தான் அழுத்தல் தான் எந்தையார் பரதந்தான்" மேலும் உண்மை விளக்கம் நம்முதலா ஓதினால் அருள் (வ) நாடாது நாடும் அருள் (2) சிம்முதலா ஓது நீ சென்று எனவும், அருளானது (வ) சிவத்தே ஆக்கும் அணுவை (ய) இருளானது (ம) தீர இன்று எனவும் கூறுகின்றது.

அஞ்செழுத்து என்பது முத்திநிலையில் சிவ எனும் இரண்டு எழுத்தே - இரண்டு பொருளே. அஞ்செழுத்தே யாவைக்கும் அப்பாலாம் மோனந்தமாமுத்தி என்கிறது உண்மை விளக்கம். உண்மை விளக்க உண்மை நிலை, பெறத்தசகாரிய விளக்கம் தேவை. அதனை விளக்கு நூல் ஆறு செய்யுள்களையே கொண்டுள்ள உண்மை நெறி விளக்கம்.

* தத்துவ ரூபம்,தத்துவக் காட்சி, தத்துவ சுத்தி 3
* ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்மசுத்தி - 3
* சிவரூபம் சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் 4

என்பன தசகாரியம். பஞ்சாட்சர விளக்கத்துடன் தசகாரித்தையும் இணைத்து விளங்க வைத்தார் தொண்டைமண்டல ஆதீன 229 ஆம் பரமாசாரிய.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சுவாமிகள் ஞானப்பிரகாச சுவாமிகள். முன்னாள் தருமபுர ஆதீனப் பல்கலைக்கழக முதல்வர், மகாவித்துவான் "அஞ்சே அஞ்சாக அறிவே அறிவாக" என்பது திருவுந்தியார். சி.வ. ஞான பூசை வழிபாடு, ஐந்தெழுத்து வழிபாடு அவ்வழிபாடு, அகபூசை வழிபாடு. அகப் பூசைக்குரிய எட்டு மலர்கள் பின்வருமாறு..

01. கொல்லாமை = அகிம்சை ஸ்ரீ புலால் உண்ணாமை.

02. ஐம்பொறி அடக்கம் = ஐம்புல ஆசையைவிடுதல்

03. பொறை = பொறுமை = சகிப்புத் தன்மை

04. அருள் = இரக்கம் = கருணை

05. அறிவு = ஞானம் = திருவருளறிவு

06. வாய்மை = உண்மை பேசுதல். நடத்தல் .

07. தவம் = மனதைப் பொறிவழிச் செல்லாமை.

08. அன்பு = எல்லா உயிர்களிலும் அன்பு செலுத்துதல்.

இவை உள்ளோர் சி.வ ஞானம் பெறுவர். ஐந்தெழுத்து வகை

01. துலாம் - நமசிவாய

02. சூக்குமம் சிவயநம

03. காரணம் சிவயவசி

04. மகா காரண பஞ்சாட்சரம் - சிவ

05. மகாமந்திரம் . சி

பட்டினத்தார் பின்வருமாறு பாடியுள்ளார்.

மாய நட்போரையும் (ந) மாயாமலம் என்னும் மாதரையும் (ம)

வீய விட்டு ஓட்டி வெளியே புறப்பட்டு மெய் அருளாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


சில மாதங்கட்கு முன்னர் இவ்வாலயத்திலே கந்த புராண விழாவிலே பங்கு பற்றிய பொழுது யாவும் சிவபரமாக விளங்கின என்பதும் குறிப்பிடத்தக்கது.

வஷ்ணு முதலிய தேவர்களைச் சூரன் முதலிய அசுரர்களிடமிருந்து பாதுகாத்தவர் கந்தக் கடவுள் என்பது கந்தபுராணமன்றே!

கோலமா மஞ்ஞைரு தன்னிற் குலவிய குமரன் றன்னைப்
பாலனென் றிருந்தேன் அந்நாட் பரிசிவை யுணர்ந்தி லேன்யான்
மால் அய தனக்கும்ஏனை வானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய நின்ற மூர்த்தியிம் மூர்த்தி அன்றே.

சைவசித்தாந்த அடியவன்
சைவப்பாதுகாப்பு
இயக்கம்

யாழ்ப்பாணம்
26-11-1974



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்மார்த்தர்கள் "சைவர்கள் எனக் குறிப்பிடுவதுதவறு

வீரகேசரி 07.07.2003 நாளிதழில் சங்கரமடம் பற்றி ஒரு கட்டுரை அதன் தலைப்பு "ஆன்மிக சமுதாயசேவையில் முன்னின்று உழைப்பது சங்கரமடம் என்பதாகும். அதில் ஒரு வசனம் இவரின் (சுவாமிகளின்) அயரா உழைப்பை சைவ உலகம் பாராட்டுகிறது. சங்கரமடம் சைவ மட மன்று ஸ்மார்த்தமடம் தாம் சைவருமல்லா் எனத் " தெய்வத்தின் குரல்" நூலிலே காஞ்சிப் பெரியவரே குறிப்பிட்டுள்ளார்.

சைவசமயத்தை சைவ கலாசாரத்தை ஸ்மார்த்தசமயமாக ஸ்மார்த்த கலாசாரமாக மாற்றம் செய்யப்பட்டமையால் இலங்கையில் ஏன் இந்தியாவில் ஏற்பட்ட விபரீதங்கள் கணக்கில் அடங்கா. இவற்றைத் தடுத்து நிறுத்தச் சைவப்பாதுகாப்புச் சேவை முப்பது ஆண்டுகளுக்கு மேலாகத் தன்னாலான பணிகளைச் செய்துள்ளது.

ஏதோ அரசியல் வாதிகளாலேதான் இலங்கையிலே பிரச்சினை ஏற்பட்டது எனப்பலரும் நினைக்கின்றார்கள். இது மகாதவறு.

எப்பொழுது சிவப்பிராமணர் சைவப்பிராமணர் ஸ்மார்த்தப்பிரமாண சங்கரமடக் கொள்கையைத் தழுவி இந்துக்கலாசாரப் பாடத்திட்டத்தைச் செயற்படுத்தினார்களோ அன்று ஏற்பட்ட அவலம் இன்னும் தொடர்கின்றது.

மேலும் தொடராமலிருக்கச் சைவசமயம் சைவ கலாசாரம் சைவர்களின் வாழ்வு நெறியாதல் வேண்டும். இதனைக் கட்டுரையாளர் உள்ளிட்ட அனைத்துச் சைவசமயத்தவர்கட்கும் பகிரங்கமாகத் தெரிவிக்கின்றன.

இந்து காலச்சாரம் என்னும் பெயரிலே இது வரை பயன்பெற்றவர்கள் எமது கருத்துக்க எதிராகவே செயற்பட்மை வரலாறு ஆகிவிட்டது. எனபதற்கு மேற்குறித்த கட்டுரையே தக்க ஆதாரமாகும். இந் நிலையில் நாம் தொடர்ந்து செயற்பட எமது முதுமை பெருந்தடையாகவுள்ளது.

அன்று மதுரையிலே இருந்த இருவர் சைவசமயத்தை மீண்டும் மறுமலர்ச்சி பெறத்துணையாக இருந்தது போல இன்றும் இலைமறைகாய் போலச் சிலர் இருப்பார்கள் எனவே இவ் எழுத்து.

எனவே நாம் பெற்ற அநுபவங்கள் ஆதாரத்துடன் அச்சிலே வெளியிடுவது மிக அவசியமாகும். சைவர்களை ஸ்மார்த்தராக்குவதும் மதமாற்றமே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(வ) தாயுடன் சென்று பின் தாயை மறந்து ஏயுமதே நிட்டை என்றான் எழிற் கச்சி ஏகம்பனே சி. நிலை - பட்டினத்தார் நிலை.

சி = நாயோட்டு மந்திரம்.

சிவ நிலை - சிவஞான சீவன் முத்தர் நிலை தன்னை (ய) மறந்தாள் தன்நாமம் (யு) கெட்டாள் தலைப்பட்டாள் நங்கை (ய) தலைவன் (சி) தானே என்பது தேவாரம். அஞ்செழுத்தாய், எட்டெழுத்தாய், ஐம்பத்தோரட்சரமாய்ப் பிஞ்செழுத்தாய் நின்ற பெருமானை போற்றாமல் வஞ்சமாய் உற்ற.... உள்ளாகி ..... பாழுக்கு இறைத்தோமே என்கிறார் பட்டினத்தார். மேலும் அவர் உரைக்கைக்கு நல்ல திரு எழுத்து ஐந்துண்டு என்கிறார். சி = பேசா எழுத்து, மௌன பஞ்சாக்கரம்.அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டு விட்டால் இன்பநிலை தானே வந்து எய்தும் பராபரமே - தாயுமானவர் அண்டருக்கா நஞ்சு அருந்தி அம்பலத்தில் ஆடு சிவன் தொண்டருக்குத் தொண்டன் எனத் தொண்டு செய்வது எக்காலம் பட்டினத்தார்.

திருச்சிற்றம்பலம்

வெளியீடு:- ஞானப்பிரகாசசிவம்

(சைவப் பாதுகாப்புச் சேவை)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ ஆலயத்தை வைணவ ஆலயமாக்கலாமா?

மாயையின் வலியோ னாகி மால்முத லோரை வென்றே
ஆயிரத் தோரெட் டண்டம் அரசுசெய் துகநூற் றெட்டு
காயம தழிவின்றாகிக் கடவுளர்க் கலக்கண் செய்த
தீயசூர் முதலைச் செற்ற குமரன்றாள் சென்னி வைப்பாம்

சைவ ஆலயங்கள் சிவாகம விதிப்படி நடைபெறுவன. வைணவ ஆலயங்கள் வைணவ முறைப்படி நடைபெறுவன. சைவ ஆலயங்களிலே சைவசமய விதி முறைகளையே பின்பற்றுதல் வேண்டும். பின்பற்றாதெழுகின் எண்ணற்ற தீங்குகள் ஏற்படும். இது அநுபவ முடிபுமாகும்.


நனி சிறப்பு வாய்ந்த சைவப் பெருமக்கள் வாழும் யாழ்ப்பாணத்துக் கிராமமொன்றின் கந்தசுவாமி கோயிலில் மகா விஷ்ணு பிரதிஷ்டை பற்றிய விளம்பரமொன்று கிடைத்துள்ளது. அதிலே சிவமயம்.குகமயம் என்பவற்றிற்குப் பதிலாக ராமஜயம் உள்ளது. சைவத்திருவுருவப்படமுமில்லை சுதர்சனமென்னும் வைணவசமயச் சின்னமேயுள்ளது. சைவத்தோத்திரத்திருப்பாடல் எதுவுமில்லை. வைணவ ஆழ்வார் பாடலேயுள்ளது. அவ்விளம்பரம் சிவபரமாக அமையவில்லை. விஷ்ணுபரமாக வைணவ ஆலயத்திற்குரியதாகவேயுள்ளது.

ஆகவே இச்செயல் பொருந்துமா பொருந்தாதா என்பதைச் சைவசமய சபைகளும், சைவக் குருமாரும், சைவப் பெரியார்களும் பிறரும் ஆராய்ந்து ஆவன செய்வார்களாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்மார்த்தர்கள் தமது சமயத்தைச் சைவம் எனவும் இந்து எனவும் கூறுவது தகாது. சைவம், வைணவும் என்பது போலச்சமார்த்தம் ஒரு சமயமே அதனை அதன் பெயரிலே வளர்ப்பது மேன்மை கொள் சைவநீதியே ஸ்மார்த்த இந்து சமயம் கலாசாரம் வேறு சைவசமயம் கலாச்சாரம் வேறு வைணவம் வேறு இதனை உணராமல் உணர்த்தாமல் மதிப்புக்குரிய ஒருவர் பெருமதிப்புக்குரிய பத்திரிகையிலே எழுவது எத்துணை விபரீதமான பாவச்செயல் என்பதையும் விளக்கி நாம் எழுதவுள்ளோம். 101A பண்டாரிக்குளம், அம்மன் வீதி வவுனியா.

ஞானப்பிரகாசரியம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# சைவசமயப் பாதுகாப்பு சமய சேவை
# அநுபவ ஆவணம்
## இதழ் இரண்டு

சைவசமயத்தைப் பாதுகாத்தல், ஏனைய சமயங்களை மதித்தல் இச்சேவையின் நாற்பது வருடக் குறிக்கோளாகும். இந்துசமயம் என ஒரு சமயம் இல்லை. சைவம் வைணம், சுமார்த்தம் முதலிய சமயங்களில் பொதுப் பெயரே இந்து சமயம்.

சைவசமயம் என்னும் பெயரில் இலங்கையில் சுமார்த்த சமயமே சமீபகாலத்திலே கைக்கொள்ளப்படுகின்றது. இது மகா பாவமான செயற்பாடு.

சுமார்த்த சமயத்தவர்கள் எனச் சுட்டிக்காட்டி அச்சமயத்தைச் சம்பந்தபட்டோர் அநுட்டிப்பதே நீதி அவ்வாறு செய்யாமல் சைவசமயப் பெயரிலே சுமார்த்த சமயத்தைப் பரப்புவது நன்மை தரமாட்டாது. ஆகவே சைவசமயம் எது எனவும் சுமார்த்த சமயம் எது எனவும் வரையறை செய்து காட்டுவது மேன்மை கொள் சைவநீதி அல்லவா?

சைவ சமயத்தவர்களின் வெளிப்படையான அடையாளம் திருநீறு தரித்தல், சுமார்த்தரும் திருநீறும் தரிப்பதனால் அவர்களும் சைவசமயத்தவர்களே எனப்பலரும் தவறாகக் கருதுகின்றனர்.

சுமார்த்தம் பற்றித் தெளிவாக அறியக் காஞ்சி சங்கராசாரிய சுவாமிகள் அருளிய தெய்வத்தின் குரல் தொடர் நூல் துணை புரிகின்றது. அந்நூல் பல பகுதிகளைக் கொண்டுள்ளது. ஒவ்வொருபகுதியும் ஆயிரம் பக்கம் உடையது. இரண்டாம் பகுதியை சான்றாதாரமாகக் கொண்டு சுமார்த்தசமய விளக்கத்தை முதலிலே தருகின்றனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ ஆலயங்கள், சிவாசாரியர்கள், சிவப்பிராமணர்கள் உள்ளிட்ட அனைத்துச் சைவசமயத்தவர்களும் சுமார்த்தம் பற்றி அறியவேண்டியது மிகமிக அவசியமாகவுள்ளது.

தெய்வத்தின் குரல் ஒவ்வொரு பகுதி நூலும் சைவசமய விநாயகர் வணக்கத்துடன் ஆரம்பம்: முடிவோ வைணவசமய ஆஞ்நேயர் வழிபாடு. எனவே சுமார்த்த சமயம் சைவசமயமோ வைணவசமயமோ அல்ல. இரண்டிற்கும் முழுமாறான சமயம். இதனைச் சுமார்த்தம் பற்றிய தெய்வத்தின் குரல் தெளிவாகக் கூறுகின்றன. மேற்படி நூலின் பகுதி இரண்டு, பக்கம் 119இல் பின்வருமாறுள்ளது.

ஸ்ரீ ஆதி சங்கர பவகத் பாதர்களை அனுசரிக்கிற அத்வைதிகளுக்கு "ஸ்மார்த்தர்கள்" என்ற பெயரே இருக்கிறது. இப்போது ஸ்மார்த்தர்களாக இருக்கப்பட்ட இளைஞர்களிலேயே பலபேருக்கு இந்த ஸ்மார்த்தர் என்ற பெயர் தெரியவில்லை. 'ஐயர்' என்றே சொல்லிக் கொள்கிறார்கள்.

மேலும் காஞ்சி சங்கராசாரிய சுவாமிகள் பின்வருமாறு மிகத் தெளிவாகக் கூறுகின்றார். இதே பகுதி ஆனந்தவிகடன் வெளியிட்ட அருள் உரை 19 இன் பக்கம் 40 இலும் உள்ளது.

"சங்கர பகவத் பாதாளை அனுசரிக்கிறவர்கள் தங்களுக்குப் பெயர் ஸ்மார்த்தர் என்பதையே தெரிந்து கொள்ளாத மாதிரி, இன்னொரு முக்கியமான விஷயமும் தெரிந்து கொள்ளாமலே இருக்கிறார்கள். தங்களுக்கென்று ஆசார்யாள் இதுதான் தெய்வம் என்று எந்த தெய்வததையும் வைக்காமல் எல்லாத் தெய்வங்களையும் சமமாகப் பார்க்கச் சொன்னார் என்பது அத்வைதிகளில் பலபேருக்கே தெரியவில்லை. தங்களுடைய உபாசனா மூர்த்தியாகப் பரமசிவனைத்தான் ஆசார்யாள் வைத்திருக்கிறார் என நினைத்துக் கொண்டு தங்களைச் சைவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்... இது தப்பு மேலும் கூறுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்மார்த்தர்கள் விபூதி இட்டுக் கொள்வதால்,அவர்கள் எல்லோரும் சைவர்கள் என்று தற்காலத்தில் தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருந்தாலும் வாஸ்தவத்தில் ஸ்மார்த்திகளின் விபூதி தாரணம் சிவ சம்பந்தம் உயைதல்ல. வேத சம்பந்தம் உடையது என்றே சொல்லவேண்டும்"

சைவசமயகுருமார்களே! சைவாலய பரிபாலகர்களே! சிவாசாரியார்களே! சிவப்பிராமணர்களே! சைவவாபிமானிகளே! இனியாவது ஸ்மார்த்தர், அவர்களின் சமயம் வேறு, சைவசமயம் வேறு. ஒன்றுக்கு ஒன்ற மாறு என்பதை உணர்ந்து ஆவன செய்வீர்களாக.

அது ஒரு அம்மன் கோவில். சைவக் கோவிலாகவே இருந்தது. திடீரென அநுமார் ஆவேசம் ஒருவருக்கு வந்தது. விபூதி பெறுபவரை பெறவிடாது தடுத்தார். அநுமார் விபூதிதாரி அல்லர். வைணவர், திருமண் நாமமேதரிப்பவர். நாமந்தரித்த வைணவர் எவருமே அவ்வூரில் இல்லை. இது எப்படி? எவரால்? ஏற்பட்டது என்றால் சுமார்த்தரால் ஏற்பட்டது என்பதே விடை.

**சுமார்த்தர் யார்? அவரின் குருயார்?**

ஆதி சங்கரரே சுமார்த்த சமயத்தை நிறுவியவர். தமிழ் நாட்டிலே தமிழர் மத்தியில் விளங்கும் சுமார்த்த பீடம் காஞ்சிச் சங்கர மடமாகும். இப்பொழுது அச்சங்கரமடம் சங்கடத்திலே சிக்கியுள்ளது. அது சைவசமயத்திற்கு எதிரானதன்று. வைணவ சமயத்திற்கும் எதிரான தன்று. சைவ, சைவணவ இரு சமயங்களுக்கும் பொதுவாக இருந்து கொண்டே தனது சுமார்த்த சமயத்தையும் பேணிப்பாதுகாத்து வருகின்றது. வாழ்க, வளர்க, காஞ்சிச்சங்கரமடம் என நாமும் வாழ்த்துகின்றோம். சுமார்த்த சமயத்தைப் பின்பற்றுவோர் வடமொழி தெரிந்த பிராமணரேயாவர். பிராமணரில் சிவப்பிராமணரும் உண்டு. வைணவப்பிராமணரும் உண்டு. சுமார்த்தப் பிராமணரும் உண்டு. இவர்கள் வெவ்வேறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமயத்தவர்களே. சுமார்த்த சமயத்தைப் பற்றித் தமிழர் அறியத் தெய்வத்தின் குரல் என்னும் நூல் வரிசை மிகவும் துணை புரிவதாகும். அதனை அருளியவர் காஞ்சிகாமகோடி பீடாதிபதி சங்கராசாரிய சுவாமிகள். சென்ற நூற்றாண்டிலே வாழ்ந்தவர். தெய்வத்தின் குரல் மூன்றாம் பகுதி 2000,2002,2003, ஆண்டுகளில் முறையே எட்டாம், ஒன்பதாம். பத்தாம் பதிப்புக்களைக் கண்டுள்ளது. இதிலிருந்தே தமிழ் வாசிக்கத் தெரிந்த சைவர், வைணவர், சுமார்த்தர் முதலிய இந்து சமயத்தவர்கள் அனைவருமே வாசித்துத் தத்தம் சமயத்தை அறிந்து அநுட்டிக்க அனைவருமே வாசித்துத் தத்தம் சமயத்தை அறிந்து அநுட்டிக்க உதவுவது தெய்வத்தின் குரல் நூல்வரிசை என கூறிப்பாராட்டலாம்.

பிராமணரில் துவைதிகள், விசிட்டாத்வைதிகள், அத்வைதிகள் என மூன்று சமயத்தவர்கள் உளர் எனக் கூறி அவர்கள் முறையே ராவ், ஐயங்கார், ஐயர் எனத் தம் பெயருடன் கூறப்படுகின்றனர் என்கிறார் சங்கரசுவாமிகள். மேலும் சுவாமிகள் பின்வருமாறு (பக்கம் 120) கூறுகிறார்.

“பொதுவாக ஸ்மார்த்தங்கள்தான் சாஸ்திரி, சர்மா என்றெல்லாமும் போட்டுக்கொள்கிறர்கள்....” சங்கர பவகத்பாதாளை அநுசரிக்கிறவர்கள் தங்களுக்குப் பெயர் ஸ்மார்த்தர் என்பதையே தெரிந்து கொள்ளாதமாதிரி, இன்னொரு முக்கியமான வஷயமும் தெரிந்து கொள்ளாமலே இருக்கிறார்கள். தங்களுக்கென்று ஆசார்யாள் இதுதான் தெய்வம் என்று எந்த ஒரு தெய்வத்தையும் வைக்காமல், எல்லா தெய்வங்களையும் சமமாகப் பார்க்கச் சொன்னார் என்பது அத்வைதிகளில் (ஸ்மார்த்தம்) பலபேருக்கே தெரியவில்லை. தங்களுடைய உபாசன மூர்த்தியாகப் பரமசிவனைத்தான் ஆசார்யாள் வைத்திருக்கிறார். என்று நினைத்துக் கொண்டு, தங்களை சைவர்கள் என்று சொல்லிக் கொள்கிறார்கள்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

" என்னை கூட ரொம்பபேர் சைவ ஆசாரியர் என்று தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்...... (பக்கம் 121)

(ஒரு குறிப்பு: தெய்வத்தின் குரல் என்பது ஸ்மார்த்த மதநூல். இது தமிழிலே எழுதப்பட்டாலும் வடமொழிச் சொற்களைத் தமிழாக்காமல் அப்படியே சொல்லுகின்றது. பூஜை தமிழிலே பூசை என எழுதாமல் பூஜை என்றே உள்ளது. நாம் கூடியவரை தமிழிலே தெய்வத்தின் குரலைத் தருகின்றனம்)

" இந்த சநாதன தரும வைதிகமதத்தைச் சேர்ந்தவர்களுக்கு (ஸ்) சுமார்த்தர் என்றே பேர். சுமார்த்தர்கள் என்றால் ஸ்மிருதியைப் பின்பற்றுவர்கள் என்று அர்த்தம். ஸ்மிருதி என்றால் தர்ம சாத்திரங்கள்."

மேலும் சுமார்த்தம் பற்றிப் பரமாசரியர் கூறுகின்றார்.

"தர்ம சாத்திரங்களில் விஷ்ணுவைத்தான் உபாசிக்க வேண்டும் என்றோ, சிவனைத்தான் உபாசிக்க வேண்டும் என்றோசொல்ல வில்லை. வேதத்திலே சொல்லப்பட்ட எல்லாத் தெய்வங்களும் இங்கே சமம்தான். சூரியன், அம்பாள், மகா விஷ்ணு, பிள்ளையார், பரமேச்வரன் ஆகிய ஐந்து மூர்த்திகளையும் ஸ்மார்த்தர்கள் பூஜை பண்ணுவார்கள். ஐந்து மூர்த்திகளை வழிபடுவதால் இதற்குப் "பஞ்சாயதன பூஜை என்று பேர்" (பக்கம் 123)

முக்கியமான ஒரு குறிப்பு: சங்கரர் சண்மத ஆறுமதத் தாபகர் என முருகனையும் சேர்த்துள்ளார். சைவசமயத்திற் குள்ளே விஷ்ணுவழிபாடு உட்பட ஆறு சமய வழிபாடும் உண்டென காஞ்சி மெய்கண்டார் ஆதீனப்பரமாசாரிய சுவாமிகள் சங்கராசாரியர் கூட்டிய சண்மதமகாநாட்டிலே நிலை நாட்டினார். அதன் விபரம் கல்கியில் வந்தது. அதனை நாம் இந்து சாதனத்திலே மறு பிரசுரம் செய்தனம். இதனைச் சைவசமயத்தவர் பாதுகாப்பார்களாக. மேலும் கூறுகின்றார் (பக்கம் 125)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஸ்மார்த்தர்கள் விபூதி இட்டுக் கொள்வதால், அவர்களெல்லோரும் சைவர்கள் என்று தற்காலத்தில் தப்பபிப்ராயம் ஏற்பட்டிருந்தாலும், வாஸ்தவத்தில் ஸ்மார்த்தர்களின் விபூதி தாரணம் சிவசம்பந்தம் உடையதல்ல; வேத சம்பந்தம் உடையது என்றே சொல்லவேண்டும். (பக்கம் 124 இல்) பின்வருமாறு கூறுகிறார். நாமம் போடுவது, அதில் பாதம் வைத்துப் போடுவது, பாதம் இல்லாமல் போடுவது இதெல்லாம் பிற்பாடு வந்த வைஷ்ணவ ஆசாரியர்கள் பண்ணின ஏற்பாடுதான்."

"ஞானரீதியில் பௌத்தமும் அத்வைதமும் ஒரே மாதிரி தான் என்று இவ்விரு சித்தாந்தங்களையும், சேர்ந்து ஆட்சேபி க்கின்ற விசிட்டாத்வைதிகள், துவைதிகள் ஆகியோர் சொல்வதுண்டு. நம் ஆசாரியாளையே மாறுவேடத்தினிருக்கிற பௌத்தவர் பிரசன்னபௌத்தர் என்று வைவதுண்டு. ஆனால் இந்த அபிப்பிராயம் சரியே இல்லை. பௌத்தம், அத்வைதம் இரண்டும் லோகத்தை மாயை என்று சொல்வதாலும், அத்வைதத்தில் ரொம்பவும் ஞானநிலை அடைந்த போது அங்கே ஈச்வர உபாசனையும் நின்று விடுவதாலும், இப்படி ஆசார்யாளையே "மாறு வேட பௌத்தர்" என்று சொல்பவர்கள் சொன்னாலும், கொஞ்சம் யோசனை பண்ணிப் பார்த்தாலும் இது ரொம்பப்பிசகு என்று தெரியும்."

உலகம் மாயை என்கிறபோது ஆசாரியாள்....... உலகம் தற்காலிக உண்மைதான், அதையே பரமசத்தியமாக எண்ணிவிடக் கூடாது என்றுதான் சொன்னார். மாயையான இந்த உலகம் (பௌத்தர் கூறும்) சூனியத்தில் கரைந்துபோய் விடுவதல்ல; மாறாக உலகம் நிரந்தர சத்தியமல்ல என்று தெரிந்து கொள்கிற போது இந்த உலகமும் அதை மாயையாகத் தெரிந்து கொள்கிற நாமும் கூடப் பரம சத்தியமும் பூரணமுமான பிரம்மமே என்று தெரியும். பௌத்தர்களின் மோட்சமான நிர்வாணம் என்பது எதுவுமே இல்லாத சூனியநிலை. ஆசாரியாளின் மோட்சமான அத்வைதமோ பேருண்மையாகவும், பேரறிவாகவும், பேரானந்த மாகவும், அதாவது சத்சித்தடையும் ஆனந்தமாக ஆகிவிடுகிற பரிபூரண நிலை. இந்த இரண்டையும் ஒன்றென்பது தப்பு" இவ்வாறு சங்கரர் கூறுகிறார். (பக்கம் 128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவத்தின் முடிவு சைவசித்தாந்தம், வேதாந்தத் தெளிவே சித்தாந்தம், சைவசித்தாந்த நூல் பதினான்கு. சிவஞானபோதம் முதல்நூல், சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் இரண்டும் சார்பு, வழிநூல், இவை மூன்றிலும் முதல் ஆறு சூத்திரமும் பொது இயல்பு எனவும் பின் ஆறு சூத்திரமும் உண்மை அல்லது சிறப்பு இயல்பு எனவும் பெயர் பெற்றுள்ளன. இவ்வாற்றால் ஏழு முதல் பன்னிரண்டு முடியவுள்ள உண்மை அதிகாரம் எனப்படுமசிறப்பு இயல்புப்பகுதி மிகவும் முக்கியம் என்பது நன்கு புலப்படுகின்றது.

சைவசித்தாந்தத்தில் பதி, பசு, பாசம் எனப்படும் மூன்றும் உண்மைப் பொருள்கள் என பொது இயல்பு எனப்படும் அதிகாரம் கூறச் சிறப்பியல்பு கூறும் உண்மை அதிகாரம் பின் வருமாறு பத்தாஞ் சூத்திரத்திலே கூறுகின்றது.

"அவனே தானே ஆகிய அந்நெறி
ஏகன் ஆகி இறைபணி நிற்க
மலமாயை தன்னொடு வல்வினை இன்றே"

முப்பொருள்களில் பாசம் ஒன்று, மலமாயை வினை என்பன பாசம். மேற்காட்டிய உண்மை அதிகாரச் சூத்திரம் முப்பொருளில் ஒன்றாகிய பாசம் இல்லை' என்கின்றது.

இத்துடன் நிற்காமல் இச்சூத்திரம் "ஏகன் ஆகி நிற்க" என்கின்றது. ஏகம் என்பது ஒன்று, அவன் என்றும் தான் என்றும் பதிபசு என இருபொருளாக இருந்த நிலைமாறி ஆன்மா சிவத்தோடு ஒன்றாகி ஏகனாகி இறைபணியில் நிற்றல் கூறப்படுகின்றது. அதாவது நான் என்னும் உயிரின் தன்மை கெட்டு இறை என ஒரு பொருளாகவே கூறப்படுகின்றது.

"இதனைப் பரமேசுரன் இவ் ஆன்மாவாய் நின்ற முறைமை யான் அவன் இடத்தே ஏகன் ஆகி நிற்க என்கிறார் உரை செய்த மெய்கண்ட தேவ நாயனார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனவே சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள் ஒருபொருளாகின்றது அல்லவா? உண்மையான ஞானநிலையில் ஒரு பொருளே பிரகாசிக்கும். இதுவே ஞானப்பிரகாச சிவநிலை. இச்சூத்திரத்திலே வரும் 'இறைபணி நிற்க' என்பது இலங்கை இந்துமாமன்ற இலட்சிய மந்திர மொழியாக இருப்பதும் இங்கே கவனிக்கத் தக்கது.

இந்த இடத்தில் வேதாந்தம் கூறும் ஒரு பொருட்கொள்கையும் சிந்தாந்தம் கூறும் ஒரு பொருட்கொள்கையும் ஒரு வகையில் சமரசமாவதைக் காணலாம்.

"பொய்காட்டி, பொய் அகற்றிப், போது ஆநந்தப் பொருளாம் மெய்காட்டு மெய் கண்டாய் விண்ணப்பம்" இது உண்மை விளக்கம் அருளிய மனவாசகங்கடந்தார் கூறுவது போதாந்தப் பொருள்தான்மெய். பொய் எது? பாசம்.சைவ சித்தாந்தப்படி பொய் என்பது விளங்கித் தோன்றாமை. சூரியன் முன் நட்சத்திரங்கள் பகலிலே விளங்கித் தோன்றுவதில்லை. இவ்வாறே சிவஞானத்தின் முன்னே அதாவது பதி முன்னே பாசம் ஏன் பசு எனப்படும் ஆன்மாவும் விளங்கித் தோன்றா. பதிலாக இருந்தும் விளங்கித் தோன்றாமை எனப்பொருள் கொள்ளல் வேண்டும். இது மிகமுக்கியமான சைவ சித்தார்ந்த உண்மை. மாயாவாத வேதாந்தம் ஒரு பொருளே உண்மைப் பொருள், அது பிரமம் என்கின்றது. சைவ சித்தாந்தமும் முடிவிலே மேற்கண்டவாறு ஒருபொருளே உண்மை என்கின்றது. இரண்டையும் தாயுமானவர் சமரசமாகக் கண்டார்.

புத்தபெருமான் ஒருபொருளும் இல்லை. சூனியம் என்பதில் சூனியம் என்பதும் 'ஒரு பொருளாக' அல்லவா பேசப்படுகின்றது. எனவே அவரும் 'ஒரு பொருளே' பேசுவதால் சைவசித்தாந்தம், வேதாந்தம், பௌத்தம் முடிவில் 'ஒரு பொருளே' ஒருவாறு பேசுகின்றன. அவ்வொரு பொருள் யாது? இனிப்பார்ப்போம்.

பொய் - மெய் பற்றிப் பேசியவர் மனவாசகங்கடந்தவர். அதாவது மெய்பொருள் மனதுக்கும் வாசகத்திற்கும் அப்பாற் பட்டது என்பர். அது மனதாலோ வாக்காலோ அறியமுடியாதது ஆனால் அவன் சத்தி ஆகிய திருஅருளால் அறியத்தக்கது என்கின்றது சைவசமயம். அவன் சி எனவும் அவன் திருவருள் வ எனவும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுட்டப்படும். திருவருள் என ஒருபொருள் உண்டு என்பதைக் காலத்தால் முற்பட்ட காரைக்கால் அம்மையார் "அருளே உலகெல்லாம் ஆள்விப்பது. அருளாலே மெய்ப் பொருளைக் காணும் விதி உடையேன்" எனத் தெளிவாகக் கூறியுள்ளார்.

திருவருளாகிய பாற்சமுத்திரத்திலே உயிர்கள் வாழ்ந்தும் அதனைப் பருகாத உயிர்களும் உள என்கின்றது திருவருட்பயன். "தன் நிலைமை மன் உயிர்கள் சாரத் தரும் சத்தி பின்னம் இலான் எங்கள் பிரான்" என்பது திருவருள் ஒரு பெரும பொருள் என்பதன் விளக்கமே. வேதாந்தியான சங்கரர் பௌத்தத்தக் கண்டிக்க வேதாந்த கேசரி விவேகாந்தர் பின்வருமாறு கூறுகின்றார்.

"புலன்களின் வரையறையைக் கடந்து செல்வதற்கான போராட்டமே மதத்திற்கு வித்து. (ஞானயோகம் பக்கம் 5) "இந்து மத ரிஷிகள் புலன்களுக்கு அப்பாற்பட்ட தத்துவங்களை அறிந்து அந்த உண்மைகளை எழுதியும் வைத்தார்கள். யூதர்கள், கிறிஸ்தவர்கள் இவர்களுடைய மதங்களும் இவ்வாறே சொல்வதை நாம் காண்கிறோம்..........

"புத்த மதத்தினரும் நிலையான அறநியதிக் கோட்பாடு ஒன்றை ஒப்புக்கொள்கின்றனர்.......... புத்தர் புலன்களுக்கு அப்பாற்பட்ட ஒரு நிலையில் இருந்தபோது தான் இந்தக் கோட்பாட்டைக் கண்டு பிடித்தார்........... புத்தரின் உபதேசங்கள் அனைத்தும் புலன்களுக்கு அப்பாற்பட்ட நிலையில் பிறந்தவைதாம்; அறிவால் ஆராய்ந்து தெளிந்தவை அல்ல.(பக்கம் 7) இங்கே அறிவுவேறு, மெய்ஞானம் வேறு என்பது உணரத்தக்கது. புலன் அறிவு, பாச ஞானமே.

"புலன் இன்பத்தைப் பொருட்படுத்தாத சிலர் ஒவ்வொரு சமுதாயத்திலும் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள் புலன்களைக் கடந்தவற்றில் இன்பம் காண்கிறார்கள்" (பக்கம் 15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சுவாமி விவேகாநந்தர் கூறுவனவற்றைக் கவனிப்போம்.

“படித்தவர்களும் பண்பட்டவர்களும் சிந்தனை, தத்துவம், கலை, அறிவியல் இவற்றில் இன்பம் காண்கின்றனர். ஆன்மீகம் இவை அனைத்தையும் விட உயர்ந்த நிலை. (பக்கம் 16) ஆன்மீகம் நமக்குத்தரும் சக்தியைப் போன்று வேறு எந்த லட்சியமும் தருவதில்லை. (பக்கம் 17)

“காலம், இடம் இந்த இரண்டு பரிமாணங்களையும் ஆளுகைக்கு உட்பட்டு நிற்கும் அறிவானது (இதைத்தான் சித்தாந்தம் பொது அதிகாரமாகக் கூறுகின்றது) காலம், இடம், மனம், புலன்கள் இவற்றையெல்லாம் கடந்து நிறக்ககூடிய முழுமையான, எல்லையற்ற, இரண்டு அறக்கலந்து விடும். (இதையே சிறப்பு உண்மை அதிகாரம் எனச் சித்தாந்த நூல்கள் கூறுகின்றன)

“உங்களுக்கு ஓர் ஆன்மா உள்ளது. எனக்கு ஒன்று உள்ளது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாக நுண் உடலும் உள்ளது. அதன் மூலமாகவே நாம தூல உடலை இயக்குகிறோம் (பக்கம் 35) இக்கருத்து சைவசித்தாந்தமே. சங்கர வேதாந்தக் கருத்தன்று).

“தன்னைத் தேடும்படியும் உணரும்படியும் உங்களைகத் தூண்டுவது, உங்களுக்கு உள்ளே இருக்கும் கடவுள் தான் (பக்கம் 42) “நான் எனது என்ற அகங்கார மமகாரங்கள் பழைய மூடநம்பிக்கையிலிருந்து பிறந்தவை....... நான் எனது என்பவை உண்மையான ஆன்மாவல்ல, ஆன்மாவின் தடைகளே என்று உணர்ந்து அவற்றை விடட்டும்.” (பக்கம் 45)

“சுயநலம் இன்மையைப் போன்ற ஓர் உயர்ந்த உண்மையைச் சமுதாயத்தில் பின்பற்ற முடியவில்லை என்றால், மனிதன் சமுதாயத்தை விட்டு விடுக் காட்டுக்குப் போய்விடுவதே நல்லது. அவ்வாறு செல்பவன்தான் துணிவுள்ளவன். துணிச்சலில் இரண்டு வகை உண்டு. ஒன்று பீரங்கியை எதிர்க்கும் துணிச்சல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொன்று ஆன்மீக விடயங்களில் ஏற்படும் திடசித்தம் (பக்கம் 47) பக்கம் 53 இல் "நானே பரம்பொருள், நானே பரம்பொருள் என்று உங்கள் மனத்திற்கு எப்போதும் சொல்லுங்கள் என்றுளது. பக்குவமில்லாதவர்கள் இவ்வாறு சொல்வது பசுஞானமாகும் என்பது சித்தாந்தம்.

"சகுணக் கடவுள் கருத்து வேதாந்தத்தின் முடிவல்ல. அது வெறும் ஆரம்பமே. இந்தக் கருத்து வளரவளர யார் வெளியே இருக்கிறார் என்று நினைத்தோமோ, அவர் உண்மையில் நமக்குள்ளளேயே இருக்கிறார். அவரே நாம் என்பதை உணர்வோம்" (பக்கம் 84) "அவரே நாம்" என்பதை உணர்வோம் என்பதற்கு முன்னுள்ள வேதாந்தக்கொள்கை சைவ சித்தாந்தக் கொள்கையே! "அவரே நாம்" என்பது நானே பிரம்மம் என்பதாகி விடுமானால் அது சித்தாந்தமன்று. சைவ சித்தாந்தத்தில் சீவன் சிவமாகாது. சிவமயமாகும் இது முக்கியம்.

"வேத உபாங்கங்களான நாலில் மீமாம்சை என்பதில் உத்தரபாகமாக "வேதாந்தம்: என்பது வந்துவிடுகிறது. சங்கரமதம், இராமானுமதம், மத்வமதம் எல்லாமே வேதாந்தத்தின் கீழ் வருபவைதான்......"

ஸ்மார்த்தங்களுக்கு அத்வைத சம்பிராயத்திலும் அதையொட்டியுள்ள சமயாசாரத்திலும் இருப்பதை விட மாத்வ, வைணவர்களுக்கு அவர்களுடையதில் பிடிமானம் மிகவும் அதிகம்."

"வேதாந்தம் - சித்தாந்தம் என்று பிரித்துச் சொல்வது வழக்கமானாலும் சைவசித்தாந்தமும் வைதிகமதமாக, "வேதாந்த அடிப்படையின் மேல் உருவானதுதான். அதை ஆதீன்கர்த்தர்கள், போசித்து வருகிறார்கள். இன்னும் இப்படியே சைதன்யர், நிம்பார்கர், வல்லபவர் முதலானவர்களின் சம்பிரதாயமும் அவற்றின் மடாலயங்களால் இரட்சிக்கப்பட்டு வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தெய்வத்தின் குரல் - நான்காம் பகுதி பக்கம் 344 கூறுகின்றது.

"சுமார்த்த சமயத்திற்கெனக் கோயில்கள் இல்லை. சைவசமயக்கோவில்களிலும் வைணவக் கோயில்களிலும் சுமார்த்ததர் வழிபாடு செய்வர்" எனத் தெய்வத்தின் குரல் மேலும் கூறுகின்றது. எனவே எவருமே எந்நிலையிலும் சைவக்கோயில் களையோ வைணவக் கோயில்களையோ தனித்துவம் கெடும்படியான செயல்களிலே ஈடுபடுவது பாவச் செயலே.

"என்னது யான் என்னல் அற்றோர் எங்கிருந்து
பார்க்கினும் நின்
சன்னிதியாம் நீ பெரிய சாமி பராபரமே

- தாயுமானவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் விழாவில் கவியரங்கம்

## எது கல்வி?

அசிரியர் சி.கார்த்திகேசு.

## எது வீரம்?

பண்டிதர் ப.இராசகுரு.

## எது மானம்?

நடன ஆசிரியர் ந.வீரமணி ஐயர்.

## எது செல்வம்,

கவிஞர், வித்துவான், சைவப்புலவர்

க.கணபதிப்பிள்ளை பி.ஏ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எது செல்வம்?

## 01. நம்பிக்கையாற் றெழுவேன்

1

தும்பிக்கை யுடையானைத் துயரமெலாந் துடைப்பானை
நம்பிக்கை யோடின்று நற்கவியாற் பாடுவனே.

11

எம்மதமுஞ் சம்மதமாய் ஏத்துபுகழ் இறையவனை
நங்கவிஞர் நாயகனை நாவார வாழ்த்துவனே.

111

செவ்வமிகுந் திருமகளைத் தேசுமிகும் பெருமகளைக்
கல்விமிகும் கலைமகளைக் கைகூப்பித் தொழுவேனே.

## 02. தமிழே வருக!

1

காலையிலும் மாலையிலும்
கடவுளடி கண்டு
கருத்தழகு உளத்தினிலே
கணந்தோறுங் கொண்டு
பாலைநிகர் மொழிபகரும்
பைங்கொடியார் நாணப்
பாவாணர்ப் பாச்செல்வி
பைந்தமிழ்த்தாய் வருக!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

மல்லிகைசேர் பல்லைநிகர்
முல்லைமலர்ச் செல்வம்
மங்கையரின் கூந்தலிலே
தஞ்சமெனக் கெஞ்ச
நல்லகவிச் சொற்செல்வர்
நற்கவிதை பாட
நகைபெருக நடைகுலுங்க
நங்கைதமிழ் வருக!

111

கம்பனொடு வள்ளுவனுங்
கருத்தரங்கிற் சிறக்கக்
கல்வியொடு செல்வமகள்
கவியரங்கிற் களிக்க
நம்புவியின் நாற்கவிஞர்
நடராஜன் முன்னே
நல்லகவிச் சொற்செல்வம்
நவரசத்தில் வடிக்க.

1V

கலைபயிற்றும் கோப்பாயின்
உயர்கழகம் வந்து
கல்விபயில் கன்னியர்கள்
கருத்தழகு கண்டு
தலைநிமிர்ந்து அழகயர்ந்து
நிலையுயர்ந்து வளரும்
தமிழ்ச்செல்வி தவச்செல்வி
கலைச்செல்வி வாழ்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03. நாடிதே - நாளிதே

1

திட்ட மிட்டுத் தந்தை யன்று
தீட்டிவைத்த பாட்டினைக்
குட்டை நாம்பன் மாட்டை மேய்த்த
குழந்தை சின்னத் தம்பியும்
பட்டணத்தைக் கிட்ட வுள்ள
சட்ட நாதர் அருளினால்
கட்ட விழ்த்து முட்ட றுத்துக்
கவிதை பாடும் நாடிதே.

11

பட்ட ணத்தைக் கிட்ட வுள்ள
திட்ட மில்லாப் பாவலன்
வட்டநிலவு பொட்டின் அழகு
சொட்டி நில்லாக் கவிகளைக்
கிட்ட வந்தும் எட்டி நின்றும்
குட்ட தொன்று மின்றியே
கட்ட மின்றி நட்ட மின்றிக்
கவிதை சொல்லும் காளிதே.

## 04. வணக்கம் - உண்மை

1

பெருமைமிகு கவியரங்கத் தலைவ ரேறே!
பேறுபல பெற்றளங்கள் அதிப ரன்னாய்!
அருமைமிகு மரங்கேறிக் கவிசொல் வோரே!
அனைத்துயிர்க்கும் அன்பெனும் செல்வம் ஈந்து
இருள்சேரா இறைவன்நல் லருளை நாட்டி
இலங்குகின்ற தமிழ்ச்செல்வி விழாவி லின்று
வருகைதந்த செல்வர்காள்! செல்வி யர்காள்!
வனப்புமிகு செல்வமக்காள்! வணக்கம், நன்றி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

எதுசெல்வம்? எதுகல்வி? மானம்? வீரம்?
ஏற்றமிகப் பாவலரே! இயம்பீ ரென்று
மதுகரஞ்சூழ் முகமதிசேர் மக்கட் செல்வம்
மருங்கிருந்து திரண்டுகேட்கத் தமிழும் வாழ
இது செல்வம்! இது கல்வி! மானம்! வீரம்!
ஏற்றிடுவீர் எப்பொழுதும் என்றே யிங்குக்
கதுமெனவே கவிபாடக் கடிதின் வந்தோம்
கலகலென கரந்தட்டி ஏற்பீர் எம்மை.

111

தமிழ்விழா தெனவறிந்தும் ஆர்வ மிக்குத்
தனையரைப்போல் தங்கையரும் தலைமை பூண்டு
தமிழ்விழா நாமெடுப்போம்! தரணி தன்னில்
தாய்த்தமிழாம் செல்வமிதைக் காப்போம்! என்று
அமிழ்தான மொழிகூறி ஆர்வங் கொண்ட
ஆசிரிய கலாசாலை மக்கட் பண்பே
பழுதில்லாப் பயன்தருநற் செல்வம் என்போம்
பாவாணர் பண்பிதுவே! பகர்ந்தேன் உண்மை.

## 05. அருளே மெய்ச் செல்வம்

1

காலிற் சிலம்பு ஒலிசெய்யக்
கையில் வளையா பதிகுலுங்கக்
காதிற் குண்டலம் ஒளிவீசும்
கன்னித் தமிழும் ஒருசெல்வம்

11

மார்பிற் சிந்தா மணிபொருந்த (தும்)
மணிமே கலையும் இடைபொருந்
வாய்மைக் குறளைத் தந்தளங்கள்
வண்மைத் தமிழும் நம்செல்வம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

111

யாதும் ஊரே எனஎண்ணி
எவர்க்கும் உழைப்பதும் ஒருசெல்வம்
தீதும் நன்றும் பிறர்தாரார்
என்றே உணர்வதும் ஒருசெல்வம்

1V

குஞ்சி யழகே செல்வமன்று
குபேர வாழ்வே செல்வமன்று
மஞ்சள் அழகே செல்வமன்று
மனத்தின் அழகே நற்செல்வம்

V

பொய்மை வாழ்விற் செல்வமிலை
பொறாமை உளத்திற் செல்வமிலை
மெய்ம்மை அறத்திற் செல்வமுண்டு
மென்மைச் செல்வம் அதுவாகும்.

V1

பொருளின் பொலிவும் செல்வமன்று
பொன்னின் அழகும் செல்வமன்று
இருளில் சுழலும் மாந்தர்க்கு
இறைவன் அருளே மெய்ச் செல்வம்

## 06. நாங்கள் நாடும் செல்வங்கள்

1

சோலையில் ஆடும் மயிற்கூட்டம் - நல்ல
சுந்தரத் தமிழின் இசையீட்டம்
மாலையிற் தோன்றும் மதியினொளி - பண்பு
மங்கையர் கொய்யும் மலரீட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

"காகா" என்னும் காக்கையொலி - என்றும்
கற்றதை மறந்திடா மாணவர்கள்
"கூ கூ" என்னும் குயிலோசை - நாளும்
குறைகள் சொல்லா நல்லாசான்

111

தத்தி நடக்கும் குழந்தைகள் - உடலைத்
தாங்கி அணைக்கும் தாயின்கை
பக்தி யோடு பாடும்வாய் - கொடிய
பகைவர்க் கிரங்கும் பண்புள்ளம்

1V

இன்சுவை உணவு சமைக்குங்கை - வாழ்வில்
இனிமை யூட்டும் இளமகார்
மஞ்சு சூழ்ந்த மலையோரம் - இன்ப
மான்கள் துள்ளும் மலர்ச்சோலை

V

நோய்க ளில்லாச் சுகவாழ்வு - கலை
நுட்பந் தேரும் மனவுள்ளம்
வாய்மை உரைக்கும் மனவலிமை - நாங்கள்
நாடும் நல்ல செல்வமிவை

## 07. வானவரும் வருவர் இங்கே

1

ஓங்கார இசைமிழற்றும் ஓடைத் தண்ணீர்,
ஒய்யார நடைபோடும் அன்னம் ஆமை,
பாங்காகப் பாட்டிசைக்கும் குயிலின் கூட்டம்,
பண்ணினொலி கேட்டுவக்கும் மயிலின் ஆட்டம்,
தாங்காத வெள்ளத்தை வாங்கும் ஆறு
தத்துகின்ற தவளைகள் தாவும் மான்கள்
தூங்காது ஒளிவீசும் சூரியன் திங்கள்
சுடர்விடுநற் சோதியெலாம் இயற்கைச் செல்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

பஞ்சைகளாய்ப் பட்டினியால் வாடும் மக்கள்
பசிப்பிணியைப் போக்கிடுதல் பண்பார் செல்வம்!
அஞ்சியஞ்சி அடிமைகளாய் வாழும் மக்கள்
ஆற்றலொடு அறிவுபெற வைத்தல் செல்வம்!
நெஞ்சினிலே உணர்வின்றி நிண்ட காலம்
நித்திரையில் மாள்வோரை எழுப்பல் செல்வம்!
தஞ்சமென வந்தோரைத் தாங்கல் செல்வம்!
தாய்த்தமிழைக் காத்திடுதல் தலைமைச் செல்வம்.

111

வள்ளலென வாழஎமை வைத்து நாளும்
வையகத்தைத் தெய்வமய மாக்கித் திண்மை
நள்ளிருளில் நடுவெயிலில் வாடும் வாழ்வை
நாடுபுகழ் குளிர்மைசெயும் பொருளும் செல்வம்!
கள்ளிருக்கும் மலர்க்கூந்தல் மாதர் கற்பு
காளையரின் கல்விபுகழ் வீரம்! மானம்!
உள்ளுவது உயர்வுள்ளல்! யாவும்செல்வம்!
உத்தமனும் வள்ளுவனின் வாக்குஞ் செல்வம்!

1V

உடற்செல்வந் தனைநாடி மாந்தர் எல்லாம்
உயிர்ச்செல்வம் நாடாமல் ஓடு கின்றார்
கடல்நடுவில் தத்தளிக்கும் கலமே போலக்
கரைகாணா தயர்கின்றார் செல்வம் என்று
டைமினுக்கல் நடைமினுக்கல் என்றே கொண்டு
உயிர்மினுக்க எண்ணாமல் உலாவு கின்றார்
திடமான மெய்ச்செல்வம் காண வேண்டின்
திருவருளாம் இறையின்பச் செல்வம் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

V

திருவருளாம் திண்மைமிகு செல்வம் சேரின்
திக்கெலாம் இன்பமழை அறமாந் தென்றல்
அருகிருந்து அசைந்தாடும் குயிலாம் பண்பு
ஆவலுடன் பாடுமன்பு அறிவே ஓங்கும்
மருளில்லா மயிலாடும்! மாதர் கற்பாம்
வண்ணநிலா ஒளிவீசும்! வண்டு பாடும்
வருவிருந்து வைகலுமே ஓம்ப வானின்
வழியிறங்கி வானவரும் வருவர் இங்கே.

## 08. வான்மதியேன்

"என்ன கவிராய! ஏதேதோ செப்புகிறீர்
செல்வ மெதுவென்னச் செப்பிடவோ வந்தீர்!
பொன்அணியும் மாதர் பொருந்துநற் செல்வமெனச்
சொல்லித் தொலையும், சூழலிது, சுகமிதுவே!
அன்றேல் அகன்றுநாம் 'செல்வம்' இன்று
மதிபோல் முகத்தர் மாதர் எனவறிந்தும்
விதிசெய் சதியால் வீணே உழன்று
இவ்வுலகச் செல்வமெலாம் இணைத்தே ஒன்றாக்கிச்
செம்மைமிகு அறிவும் கல்வியெலாம் திரட்டி
வீரமொடு மானம் விமானமதில் ஏற்றி
அவ்வுலக வான்மதியை அடைவோம் எனமுயலம்
ஆடவரில் நீரும் ஒருவர்! ஆதலினால்
நாம்சொல்வதைக் கேளும், அன்றேல் நாம் 'செல்வம்'
என்னும் மொழிகேட்டு இருந்தேன் சிலநிமிடம்
அக்குரல் தான்..............."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மங்கையர்தாமே மதிபோல் முகத்தர்
தங்கம் அவர்மேனி தாங்கும் அவர்செல்வம்!
நெற்றி நிலாத்துண்டு! நீண்டகுழல் கார்மேகம்!
முற்றியநல் முத்துப்பல் முல்லைநகை முறுவல்!
அத்தனையும் கொண்ட அருஞ்செல்வம் பெண்செல்வம்!
எங்குமே செல்லாமல் ஏக்கமிகக் கொள்ளாமல்
இங்கிருந்தே பாடும் ஏற்றமிகும் செல்வமிதைக்
கண்ணில்லாக் கவிராய கனத்த நும்வாலெங்கே
(கண் + இல்லா; கண் + நில்லா; கவி - குரங்கு)
பெண்ணழகு காணார் பெருஞ் செலடவங்காணாரே
விண்ணழகு காண்பார் வீண்செல்வங் காண்பாரே
என்னும் ஒலிகேட்டு எழுந்தேன் துயில்ஒழிந்தேன்
அன்னதன்பின் அறைந்தேன் சிலகவிகள்.

## 09. மாதகலானான கதை

1

இருந்தமிழ்ச் சொல்லுக் குள்ளே
இறையருள் இருந்தல் போலக்
கருங்கயற் கண்ணார் தம்மில்
கடவுளின் வடிவங் கண்டு
பொருந்திய அன்பும் கற்பும்
புவியினில் உலவுங் காட்சி
ஒருங்கிப் பதனை எண்ணி
உள்ளத்திற் செல்வம் கொண்டேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

11

அன்னைபோல் வடிவு காட்டி
அவளருள் அழகும் நாட்டிக்
கன்னிமைத் தன்மை கூட்டிக்
கருணைசேர் நிலவை ஊட்டிப்
பொன்னினணி திகழும் கோலம்
புவிதனிற் கொண்ட மாதர்
தன்னையிற் றிருவே அன்னார்
தாய்மை சேர் தலைமைச் செல்வம்.

111

பாதகத்தை வேரறுக்கும் பண்புமிகு பைந்தொடியார்
கீதகற்றி வையகத்தைத் திகழவைக்கும் நற்செல்வம்
ஆதலினால் அன்னவரும் அழியாற் செல்வமென் பேன்
மாதகலான் மதிசூடி மங்கைபங்க னுனுனே!

## 10. நன்றி வணக்கம்

எதுசெல்வம்? எது கல்வி? மானம்? வீரம்
ஏற்றமுடன் இங்குரைக்கும் வருகை ஏற்று
முதுதமிழை விழாமற்செய் மாதர் சந்தம்
முந்துதமிழ் ஆசிரிய வணக்கம் நன்றி
கதுமெனவே பாட்டிசைக்கும் தலைவர் அன்னை
கன்னலெனக் கவிதைசொலும் கவிதை வாணர்
மதுவுண்ட வண்டென்னக் கவி(க்)கள் உண்டு
வாய்மடுத்த சபையோர்க்கென் வணக்கம் நன்றி.

முற்றும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. 'வருகை', 'சந்தம்', 'கவி(க்)கள்', 'சபையோர்க்கென்' முதலியன சிலேடை.

பூரணம் ஒருபொழுதும் தனது துறையினின்றும் குறைவதில்லை. ஜட உலக இருளிலும் அது வியாபகமாய் இருக்கிறது. ஆனால், இவ்விருளே அதைப் பாதிப்பதில்லை. இறைவன் அருள் எல்லார்க்குமுரியது. ஆனால், மக்களின் குறைபாட்டால் அது பாதிக்கப்படுவதில்லை. நம் கண்ணிலுள்ள தோஷம் சூரியனைத் திரிவு படுத்திக் காட்டலாம். ஆனால், சூரியன் அத்தோஷத்தால் பாதிக்கப்படுவதில்லை.

- விவேகானந்தர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

அருள்மிகு நகுலாம்பிகை சமேத நகுலேசுவரர் துணை

அரன் நாமமே சூழ்க - சம்பந்தர்

கல்லால் நிழல் மலைவில்லார் அருளிய

பொல்லார் இணைமலர் நல்லார் புனைவரே - மெய்கண்டார்

# மெய்கண்டதேவர் ஆதீனம்



480, கஸ்தூரியார் வீதி (யாழ் இந்து விளையாட்டு மைதானச்சந்தி)
தொடரகம் : 516, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## சி. வ. ஞானச் செயலகம் அழைக்கின்றது

ஆரம்பம்: தைப்பூசத்திருநாள் (27.01.94) வியாழக்கிழமை, குருபணிசெய் ஆதினத் தொண்டுசெய் முதல்வர் சீருடையும் சிறப்புப் பெயரும் சிவாசாரிய குருவிடம் பெறுதல் அன்று காலை மாணிக்கப் பிள்ளையார் கோவிலில் நிகழும். முற்பகல் 09.00க்குச் சி. வ. ஞானச் செயலகம் (இலக்கம் 480 இல்) ஆரம்பமாகும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

## மெய்கண்டார் ஆதீனச் சுருக்க வரலாறு

காஞ்சி தொண்டை மண்டலம் மெய்கண்டார் ஆதீனப் பண்ணிசைப் புலவர் பண்ணிசையை இங்கு வளர்த்தார், ஆதீனக் குரு முதல்வர் பல தடவை வருகை தந்து ஞான தீட்சை அளித்தார், 1973 இல் மெய்கண்டார் ஆதீனத்தை இங்கு நிறுவினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஸ்ரீமத் ஞானப்பிரகாசத்தம்பிரான் சுவாமிகள் 16 ஆண்டுகள் பீடாதிபதியாகச் சிறந்த சேவையாற்றினார், அவர்கள் சிவப்பேறு பெற்றதும் ஆதீனப்பணிகள் தடைப்பட்டன. அதனால் ஆதீன முன்னாள் அமைப்பாளர், சிவாசாரிய குருமூர்த்தி மற்றும் அன்பர்கள் கருதிய வண்ணம் நாம் இப்பணியினை ஏற்றனம். இரண்டாண்டுகள் நிறைவுற்றன.

சிவபெருமானை முழுமுதற் கடவுளாகக் கொண்டது நமது சமயம் அதில் அம்பிகை, கணபதி, கந்தவேள் வழிபாடும் குருலிங்கசங்கம வழிபாடும் அடங்கும். சமயகுரவர், சந்தானகுரவர் காட்டியநெறி நம்நெறி. இது சரியை கிரியை, யோகம்,ஞானம் என நான்கு மார்க்கங்களை உடையது.

மெய்கண்டதேவர் ஆதீனம் ஞானத்திற் சரியை, கிரியை யோகம் ஞானம் ஆகியவற்றைச் சிறப்புப்பணியாகக் கொண்டு இலவச சேவையாற்றும், அதன் பொருட்டு மேற்காட்டிய செயலகம் செயல்புரியும். நாயன்மார் மற்றும் சிவ நெறியாளர் உரிய தினங்களில் நினைவு கூரப்பெறுவர்.

எல்லாவற்றிக்கும் மேலாகக்கிடைத்தற்கரிய நூல் களைக் கற்று, உணர்ந்து சி. வ. ஞானப்பேரின்பம் பெற எமது ஆதிபரமாசாரியர், அவர் முன்வந்தோர் அருளிய நூல்களும் உரைகளும் உதவும், ஆதீனத்தை நிறுவிய ஆதிகுரு முதல்வர் தருமபுர ஆதீனச் சார்பில் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர் தேவாரங்கட்குத் தக்கவுரை எழுதியவர். சித்தாந்த சாத்திர உரை, பஞ்சாட்சர உபதேசம் மௌனமாக உணரத்தக்கவை சி. பேசா எழுத்து, நாயோட்டுமந்திரம். வ.பேசும் எழுத்து. அன்பர்கள் தமது கருத்தினை எழுத்திலே தரலாம் ஆதீனம் இப்பொழுது பொருத்தமான நூல்களை மட்டுமே நன்கொடையாகப் பெறும், இவ் விளம்பரத்தை அனைவரும் அறியும் வண்ணம் செய்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சைவசமயம் என்ற பெயரில் சமயகுரவர், சந்தானகுரவர் நிராகரித்த கொள்கைகள் நமது சமயத்தில் புகுந்துள்ளமையைக் கடந்த கால் நூற்றாண்டாக எடுத்துக் காட்டிவரும் சைவப் பாதுகாப்புச் சேவை அதற்குரிய முகவரியில் தொடர்ந்து நிகழும்) எமது வெளியீடு: சிவஞானப் பிரகாசம்

வாழ்கவையகம், வளர்க சிவநெறி, அன்பே சிவம்
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

இவ்வண்ணம்
சீலத்திருசித்தாந்த சரபசிவம்
குருபணிசேர் தொண்டுசெய் முதல்வர்
மெய்கண்டதேவர் ஆதீனம் 480, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
யாழ்ப்பாணம், சித்தாந்த சைவப் பாதுகாப்புச்சேவை,
கௌரவ இயக்குநர், சைவசித்தாந்த கலாநிதி
மகாவித்துவான் க. கணபதிப்பிள்ளை பி. ஏ.உவந்தளித்த

## சிறப்புரை

மெய்ப்பொருள் சிவம். மனம் வாசகங் கடந்த பொருள் அது. அங்கு இங்கு எனாதபடி எங்கும் பிரகாசமான அதன் நிலை சிவப்பிரகாச நிலை. அது சிவமயம் எனப்படும்.

சிவம் சமயமாகவும், சமயங்கடந்த சமயாதீதமாகவும் உள்ள செம்பொருள். சிவநடனம் ஊனநடனம், ஞானநடனம் என இருவகை. ஊனநடனம் உலகியல் பற்றியது. ஞான நடனம் மறைஞானம் பற்றியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவசித்தாந்தம், ஞானநடனமாகிய மறைபொருள் ஞானத்தையே விளக்க எழுந்தது. மெய்கண்டாரின் சிவஞானபோதம், அதனை விளக்க எழுந்த சிவஞானசித்தியார், சிவப்பிரகாசம் என்பன சைவசித்தாந்த மறை ஞானத்தை இருவகையாக வகுத்து உரைக்கின்றன. அவை பொது அதிகாரம், உண்மை அதிகாரம் எனப் பெயர் பெற்றுள்ளன. உண்மை அதிகாரத்தினைச் சிறப்பதிகாரம் எனவும் கூறுவர்.

பொதுவதிகாரம் முப்பொருள்கள், முப்பத்தாறு தத்துவங்கள் உள என்பதனைப் பிரமாணத்தாலும் இலக்கணத்தாலும் நிலை நாட்டுகின்றது; படிப்பறிவாகிய அறிவு ஆராய்ச்சிக்குரியது.கேட்டல், சிந்தித்தலுக்குரியது. உண்மை அதிகாரம் கேட்டல் சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல ஆகிய நான்கிற்கும் உரியது. கல்வி கேள்வி அறிவிற்கு அப்பாற்பட்ட திருவருளால் உணரப் பெறும் அநுபூதி ஞானத்திற்குரியது. சாதனை பயனைத் தன்னகத்தே கொண்டது.

பொது அதிகாரம் கூறும் சைவசித்தாந்த தத்துவ விளக்கமே சைவ சித்தாந்த மறைஞான[illegible] எனக் கருதும் சைவசித்தாந்திகள் பொதுவாக நாடெங்கும் உ[illegible]ர். இதனால் சைவசித்தாந்த உண்மை அதிகாரத்திற்குரிய மறைஞானம் மறைவான ஞானமாகவே பெரிதும் கொள்ளப்படுகின்றது.

இத்தகைய சூழ்நிலையில் உண்மை அதிகாரம் கூறும் சைவ சித்தாந்த மறைஞானம் பற்றிப் பலவாறு சிந்தித்துத் தெளிந்து பொதுமக்களும் அறியத்தக்கவகையில் எழுதவும் ஆற்றலுடையவராக விள[illegible]றப்புக் குரியவர் சித்தாந்தச் சுடரொளி நா. செல்லப்பா அவர்களாவர்.

கலைமகள் விளக்கம், அறிதுயில், இறைபணி நிற்றல் என்பன முன்னர் வெளிவந்த ஆசிரியரின் மறைஞான விளக்க நூல்களாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவஞானபோதம் பத்தாம் சூத்திரம் உண்மை அதிகாரத்தைச் சேர்ந்த மறைஞானச்சுரங்கம். முப்பொருளை இருபொருளாக்கி இருமையை ஒருமையாகக் காட்டுவதாகும். அது பற்றிய நூலே இறைபணி நிற்றல்.

திருவடி சேர வாரீர் என்னும் இந்நூலின் முதற் கட்டுரை "திருவடி சேர வாரீர்!" என்பது. அதுபதினொராஞ் சூத்திரம் பற்றியது அதன் முதற் பந்தி.

"மறைபொருள் விளக்கத்தை மறைஞானம் என விபரிப்பார்.

அதற்கு இலக்கண இலக்கியப் பொருள் உரைப்பதனால் அதன் உண்மை விளக்கத்தைப் பெறுதல் அரிதாகும். மறைபொருளை தாரணை தியான சமாதி மூலம் ஒவ் வொருவரும் சுயமாகவே பெறுதல் வேண்டும்" எனக் கூறுகின்றது.

வீரகேசரி வார வெளியீட்டில் வெளிவந்து பலரின் பாராட்டு தலைப் பெற்ற கட்டுரைகளின் தொகுப்பே இந்நூல். ஆசிரியரால் பல்வேறு சந்தர்ப்பத்தில் எழுதப்பெற்றவையாயினும் சேற்கூறிய உண்மை அதிகார மறைஞானத்திற்குரியவையாக விளங்குகின்றன. இவ்வாறு உண்மை அதிகாரம் கூறும் மறைஞானம் பற்றிய விளக்க நூல்கள் தமிழில் ஒரு சிலவே வெளிவந்துள்ளன.

உலகியல் பற்றிய நூல்களே தமிழில் வெளிவந்து பலரின் பாராட்டுதலைப் பெற்றுவரும் இக்கால கட்டத்தில் ஆசிரியரின் மறைஞானச் சிவத்தமிழ்ப்பணி சிறப்புமிக்க அரியபணி என்பதற்கு எட்டுணையும் ஐயம் எழ இடமில்லை.

மறைஞானக் கருத்துக்களை நூலாசிரியர் உலகியல் உளவியல், அறிவியல், அறவியல், அருளியல், மெய்யியல், தமிழியல் தருக்கவியல் முதலிய பல்வேறு துறைகளைத் தழுவி விளககும் சிறப்பு மறைஞானம் மறுமலர்ச்சி பெற்று தலைநிமிர்ந்து பீடுநடை நடக்கச் செய்யும் செயற்பாடாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைஞானம் கற்றோர்க்கு மாத்திரம் உரித்தானதன்று கல்லாதாரும் திருவருளினால் மறைஞானியாகத் திகழலாம். சீவன்முத்தராக உலகிலே வாழலாம்.

கற்றோரும் கல்லாதோருடன் மறைஞானிகளாக விளங்கும் சிறந்ததோர் ஞானபரம்பரை நம்மிடையே உண்டு. செல்லப்பாச் சுவாமிகள், சிவயோகசுவாமிகள், பாரதியாரின் ஞானகுருவாகிய யாழ்ப்பாணத்துச் சுவாமிகள், ஆன்ம விசாரம் தந்த சுப்பிரமணிய ஐயர், சிந்தனைச் செல்வர் பொ. கைலாசபதி முதலியோர் ஒரு சிலராவர்.

மறைஞான நூல்களை எழுதிய கற்றோர் வரிசையில் தாயுமானவரை மேனாட்டார்க்கு அறிமுகஞ் செய்த சேர். முத்துக் குமாரசுவாமி, அவர் மகன் சிவநடனம் பற்றி எழுதிய கலாயோகி ஆனந்தகுமாரசுவாமி சேர் பொன் அருணாசலம், இராமநாதன் திருவிளங்கதேசிகர், நீராவியடி விசுவநாதன், சிவபாதசுந்தரனார் முதலியோர் குறிப்பிடத்தக்கவர்களில் ஒரு சிலராவர்.

இடைக்காடர், வித்துவான் இராமலிங்கம், சோமசுந்தரப் புலவர் முதலியோர் நாவல், நாடகம் முதலியவற்றாலும் மறைஞானத்தை வளர்த்தனர். பொதுவாக 1930க்குப் பின்னர் ஈழத்தில் சைவசித்தாந்த மறைஞானம் பற்றிய எழுச்சி மலர்ச்சி அடையவில்லை. தளர்ச்சியே அடைந்தது என்பதற்குரிய சான்றாதாரங்களே நிறைய உண்டு. பல்கலைக்கழகத்திலே அழமான ஆய்வுகள் மேற்கொள்வதன் மூலமேதான் மறைஞான சிந்தனை நன்கு விரிவடைய முடியும்.

கலாநிதி பொன்னையா எழுதிய சைவசித்தாச்த ஞான விளையாட்டு, பண்டிதமணி அவர்களின் சமயக்கட்டுரைகள் குறிப்பிடத்தக்கவை. முன்னவரின் நூல் பிரசித்தி பெறாமையால் மறைஞான விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தத் தவறிவிட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்டிதமணி அவர்கள் மறைஞானத்திலும் இலக்கியத்திற்கே முதன்மை அளித்தமையால் முழுமையான மறை"ஞான மலர்ச்சி அவரைப் போற்றுவோர் மத்தியில் ஏற்படவில்லை.

மறைஞான மலர்ச்சி கற்றோரிடையே ஏற்படப் பல்கலைக் கழகத்தின் பங்களிப்பு சிறப்பாக அமைதல் வேண்டும். அதற்கு உதவும் வகையில் இந்நால் அமைந்துள்ளமை இதன் சிறப்பியல்பில் ஒன்றாகும். திருவள்ளுவரின் "மெய்ப்பொருள் காண்பது அறிவு" என்பதனையே மெய்கண்ட சாத்திரங்கள் விளக்கி உரைக்கின்றன. அதனைச் சுருங்கிய அளவிலே விளக்கிய இந்நூலாசிரியர் காஞ்சி மெய்கண்டார் ஆதீனப் பரமாசரியர் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகளால் நிறுவப்பெற்ற கொழும்பு, திருநெறிய தமிழ்மன்ற "மெய்கண்டார் நெறி" யின் கௌரவ ஆசிரியர்; பன்மொழி அறிஞர்; ஆங்கிலத்திலும் தமிழிலும் சிறந்தமேடைப் பேச்சாளர்; பலவேறு சமய தத்துவங்களை உணர்ச்தவர்; பட்டம், பதவி, பாராட்டு, பரிசு, புகழ் முதலியவற்றிற்காகத் தமது கொள்கைகளை விட்டுக்கொடுக்காதவர். எவருடனும் மெய்ப் பொருளைப் பற்றிப் படாடோபமின்றி உரையாடுபவர். எல்லாவற்றிற்கும் மேலே அநுபூதிமான். அண்மையில் இந்து கலாசார அமைச்சின் சார்பில் கொழும்பில் நிகழ்த்திய சொற்பொழிவும் யாழ்ப்பாணத்தில் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழ்த்திய சொற்பொழிவும் பலரது பாராட்டுக்களைப் பெற்றவையாகும். ஆசிரியர் இலங்கை மெய்கண்டான் ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச சுவாமிகளுடன் கொண்டிருந்த ஆன்மீகத் தொடர்பும் குறிப்பிடத் தக்கதாகும்.

இத்தகைய பெருந்தகை "நான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்பதற்கேற்ப அளித்த இந்நூலினைப் பலதடவை வாசித்து சிந்தித்துத் தெளிந்து சீவன் முத்தராக வாழ முயல்வோமாக. சமயநிலையிலுள்ளோர்க்கும் சமயாதீதநிலையிலுள்ளோர்க்கும் உரிய இந்நூல் மிளிர்வது இதன் தனிச்சிறப்பாகும். எல்லோரும் வாழ்க இன்பமே சூழ்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயுமானவர் பாடல்

### தன்னை

தன்னை அறியத், தனது அருளால் தான் உணர்த்தும்
மன்னைப் பொருள்ளனவே வாழாமல் பாழ்நெஞ்சே!
பொன்னைப் புவியை, மடப் பூவையரை மெய்எனவே
என்னைக் கவர்ந்து இழுத்திட்டு என்னபலன் கண்டாயோ?

### இதுவே நம் சைவ சமயம்

சைவ சமய மேசமயம்;
சமயா தீதப் பழம்பொருளைக்
கைவந் திடவே மன்றுள்வெளி
காட்டும்; இந்தக் கருத்தைவிட்டுப்,
பொய்வந்து உழலும் சமயநெறி
புகுத வேண்டாம்; முக்திதரும்
தெய்வ சபையைக் காண்பதற்குச்
சேர வாரும் ஜகத்தீரே!

### எடுத்த தேகம்

#### எண்சீர்க்கழிநெடிலடிஆசிரிய விருத்தம்

எடுத்த தேகம், பொருள், ஆவி மூன்றும் நீ;
எனக்கு ஒன்று இல்லை என , மோன நன்னெறி
கொடுத்த போது கொடுத்தது அன்றோ? பினும்
குளறி நான்என்று கூத்தாட மாயையை
விடுத்த வாறும், கண்ணீரொடு கம்பலை
விலகு மாறும், என் வேட்கைப்ர வாகத்தைத்
தடுத்த வாறும் புகலாய்; சிரகிரித்
தாயுமான தாயாபர மூர்த்தியே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### முகம்எலாம்

**கலிநிலைத்துறை**

முகம்எ லாம்கணீர் முத்துஅரும் பிடச், செங்கை முகிழ்ப்ப,
அகம்எ லாம்குழைந்து ஆனந்தம் ஆக, நல் அறிஞர்
இகம்எ லாம்தவம் இழைக்கின்றார்; என்செய்கா ஏழை?
ஜகம்எ லாம்பெற நல்லருள் உதரமாச் சமைந்தோய்!

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

*'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்'*

**திருக்கைலாச பரம்பரை**

## மெய்கண்டார் ஆதீனம்

**இலங்கை**

**சீலத்திரு ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் குருமகா சந்நிதானம்.**

**தினசரி இலவச சேவை விபரங்களுக்கு எழுதுக.**
**தொலைபேசி: 024 - 2220684**

101A, **அம்மன் வீதி, பண்டாரிக்குளம், வவுனியா.**

## மெய்கண்டார் ஆதீனக் குரல், ஒன்று. சைவ சமயச் சான்றோர்களுக்குப் பகிரங்க அறிவித்தல் 10.11.2003 வெளியீடு

01. சைவ சமயம், இந்துசமயம் என்னும் பெயர்களில் சமய குரவர், சந்தானகுரவர் நெறியைப் பின்பற்றும் சான்றோர்களே! இலங்கையில் மெய்கண்டார் ஆதினம் நிலைபெற ஆவன செய்யும் வண்ணம் வேண்டுகின்றனம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. ஒரு குருவினால் தோற்றுவிக்கப்பட்டுச் சைவசமயத்தைப் பரப்புவதற்குச் சைவத்துறவிகளால் நிருவகிக்கப்படும் அமைப்பு ஆதீனம் எனப்படும். இதற்கு ஏற்ப இலங்கையில் இரண்டு ஆதீனங்களே இன்று உள.

03. மெய்கண்டார் ஆதீனம் 1972ஆம் ஆண்டு சித்திரைச் சித்திரையன்று காஞ்சி தொண்டைமண்டல மெய்கண்டார் ஆதீன பரமாசாரிய சுவாமிகளால் கொழும்பிலே நிறுவப்பெற்றதாகும். எனவே இதன் அடிப்படைக்கொள்கை மெய்கண்டார் சந்தானப் பரம்பரையைச் சார்ந்ததாகும். அதனையே இலட்சியமாகக் கொண்டதாகும்.

04. சந்தானம் தொடர்ச்சி, பரம்பரை, தொடர்ந்து வரும் சந்ததி மெய்கண்டார் சந்ததி திருக்கைலாச குரு சீடபரம்பரை. மெய்கண்டார் குரு சீட பரம்பரைத்துறவிகளே ஆதீனக் குருமுதல்வர் ஆகலாம். நாம் சோதிடம் கூறிய படி உடல் நலக் குறைவு ஏற்பட்டமையால் ஒரு குரு முதல்வரை நியமிக்கும் வண்ணம் ஒரு சபையை ஏற்படுத்தியும் எவரேனும் குரு முதல்வராக பதவி ஏற்றிலர்.இதனால் ஆதீனம் நிலைபெறும் பொருட்டு மீண்டும் குருமுதல்வராகியுள்ளனம் என்பதை அன்புடன் அறியத்தருகின்றனம்.

05. மெய்கண்டார் ஆதீனத்தின் மிக முக்கிய முதன்மையான தேவை ஒரு குருமுதுல்வரேயாவார். எனவே மெய்கண்டதேவநாயனார் சந்ததிக்குரிய அடிப்படைக்கொள்கைகளை நடைமுறைப் படுத்தவல்ல ஒருவரோ பலரோ இவ் ஆதீனத்திற்குத் தேவைப்படுகின்றனர். அங்ஙனம் ஒருவரோ பலரோ கிடைத்தால் ஆதீனத்திற்குரிய ஏனைய ஏற்பாடுகளைச் செய்யலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. மெய்கண்டார் பரம்பரை சைவசித்தாந்த தத்துவ சாத்திர பரம்பரை, பதினாங்கு சாஸ்திரங்களும் பன்னிரண்டு திருமுறைகளும் முப்பெரு சைவத்தமிழ்ப் புராணங்களும் மெய்கண்டார் ஆதீன அடிப்படை நூல்கள். இவற்றோடு காஞ்சி மெய்கண்டார் ஆதீனப் பரமாசாரிய சுவாமிகள் கற்று உணர்ந்து செயற்படுத்துவதே எமது ஆதீனக் குறிக்கோளாகும்.

07. வேதநெறி சைவத்துறை சாராத பிறஇந்துசமயக் கொள்கைகளை சைவ ஆதீனங்கள்வளர்ப்பது, பிரசாரஞ் செய்வது பெரும் பாவமாகும். ஆனால் பிறசமயக் கொள்கைகளை அவ்வச் சமயத்தவர்கள் வளர்ப்பதைத் தடுப்பது எமது கொள்கையன்று.

08. ஆதீனப் பெயரின்றி மெய்கண்டார் நிறுவனம், சைவப் பாதுகாப்புச்சேவை என்னும் பெயர்களிலே நாம் செய்த சேவைகள் இனி ஆதீனப்பெயரிலே நிகழும்.

09. தபாலிலே இலவசமாகவும் ஆதீனச் வேசை, பிரசாரம், போதனை நிகழும்.

10. சைவசமய வரலாறு பற்றியும் மெய்கண்டார் ஆதீனம் ஈடுபடும், ஆவன செய்யும்.

11. தகுதி வாய்ந்த அன்பர் ஒருவர் எமக்குப் பின்னர் இவ்வாதீனத்தின் குருமுதல்வராகப் பதவி ஏற்பதாகக் கூறுகிறார். விபரம் பின்னர் வெளிவரும்.

12. ஆதீனம் நிலைபெறத் துறவிகள் பலர்தேவை. பிரபல தமிழக சைவ ஆதீனமான காஞ்சி மெய்கண்டார் ஆதீனம் இருநூறுக்கு மேற்பட்ட பரமாசாரிய சுவாமிகளைக் கண்டுள்ளது. காரணம் பலர் முதிய வயதிலே முதல்வரானமையாகும். ஆதீனத்துறவிகளாகிச் சைவசமயத்தை வளர்க்கும் வண்ணம் பகிரங்கமாக வேண்டுகின்றனம். திருக்குறள் அறத்துப்பால் பார்க்க.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. எங்கள் சைவ சமய நாயன்மார்களிலே மிகப்பலர் இல்லறத் தவராவர். இல்லறத்தை மேற்கொள்ளும் சைவச்சான்றோர் பலர் இலங்கையிலே சைவசமய வளர்ச்சிக்குச செய்து வரும் பணிகளை ஆதீனம் பாராட்டுகின்றது. வரவேற்கின்றது. இல்லறத்தோர் துறவியாக ஆதீனம் ஆவன செய்யும்.

14. சைவசமயத்தவர் எவரும் இதிலே கூறப்பட்டவற்றிற்கு, மாறான கருத்துக்களை எமக்கு எழுத்திலே எழுதலாம். விளக்கம் தருவது எமது கடமை. சைவசமயத்தவரல்லாதார் எழுதுதலாகாது.

15. மெய்கண்டார் ஆதீனக்குரல் என்பது தொடர்ந்து அச்சிலே வெளிவரும். அன்பர்களின் முகவரி தேவை.

16. ஆதீனம் மற்றும் எமது சேவைகளுக்கு ஆதரவுதந்த, தருகின்ற அனைவர்க்கும் நன்றி.

17. உடனடியாக ஒருவர் ஆதீனக்குரு முதல்வராகப் பதவி ஏற்று ஆதீன அடிப்படைக் கொள்கைகளை நடைமுறைப்படுத்த முன்வருவாராயின் நாம் ஓய்வுபெற்றுக் கொள்ளவுள்ளனம். வயது எழுபத்தேழு ஆகின்றது.

18. ஆதீனச் செயற்பாடுகள் தினசரி வவுனியா தேக்கம்தோட்டம் இலக்கம் 223 இலே உள்ள கச்சியப்ப சிவஞான பீடத்திலே பிற்பகல் மூன்று மணி முதல் ஐந்து மணி வரை நிகழும் பஞ்சாங்கத்திலே உள்ளவாறு நாயன்மார் குருபூசை வழிபாடு மேற்படி பீடத்துடன் இணைந்து நிகழுகின்றது. மேற்படி பீடத்தின் நிகழ்வுபற்றிய விளம்பரம் தனியே அப்பீடத்தினால் வெளிவருகின்றது ஆதீனச் சார்பில் இப்பொழுது திருமந்திர பாராயணம் அங்கு நிகழ்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19. ஏனைய நேரங்களில் ஆதீனமுகவரியில் தினசரி திருமுறை, சிவஞானபோதம் ஓதுதல், மற்றும் ஞானநூல் செயற்பாடுகள் முதலியன நிகழும்.

20. மெய்கண்டார் குருபூசை விழாவைச்சிறப்பாக நடாத்திய இந்து கலாசார அமைச்சு, வவுனியா அரச அதிபர்கள், மற்றும் குருமன்காடு விநாயகர் ஆலய நிருவாகிகள் முதலியோர்க்கு நன்றி.

21. இவ் ஆதீனம் நிலைபெறப் பணமோ பொருளோ நிலமோ இன்றைய தேவையன்று. மெய்கண்டார் கொள்கைகளை முரணின்றி முன்னெடுத்துச் செல்லும் துறவிகளே முதன்மைத்தேவை.துநவிகளாக எவரும் பதவி ஏற்க முன்வராவிடின் எமக்குப்பின் இவ் ஆதீனம் செயலற்று விடும் என்பதைச் சைவாபிமானிகள் அனைவரும் கருத்திலே கொள்வார்களாக.

திருச்சிற்றம்பலம்

**இங்ஙனம்**
**ஞானப்பிரகாசசிவம்**
**குருமுதல்வர் மெய்கண்டார் ஆதீனம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அடியார்க்கு அடியவன் ஞானப்பிரகாசம்

# அநுபவ ஆவணம்

## இதழ் ஒன்று

விநாயகப் பெருமானுக்கு வணக்கம். சிவ அடியார்க்கும் வணக்கம். சைவசமயம் நம் சமயம். சிவனை அம்பிகையை கந்தன் கணபதி முதலியவர்களை வழிபடுவது நம் சமயம். சமய குரவர் நால்வர், சந்தானகுரவர் நால்வர், அறுபத்து மூன்று நாயன்மார் நம் சமய குரவர்கள்.

பன்னிரு திருமுறை, பதினான்கு சாத்திரம், தாயுமானவர், அருணகிரிநாதர் முதலியோர் அருளியவை சைவசமயத்திற்கு உரியவை. வேதம் பொது, ஆகமம் சிறப்பு. வேதத்தை அடிப்படையாக கொண்ட தமிழர் தம் மற்றோர் சமயம் வைணவம், ஆழ்வார்கள் அருளிய தமிழ்ப் பாடல்கள் வைணத்தின் சிறப்புக்கு எடுத்துக்காட்டு.

ஸ்மார்த்தம், சுமார்த்தம் என வேதத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமயம் இருக்கின்றது.

சுமார்த்த நூல் எதுவும் தமிழிலே இல்லை. யாவும் வடமொழியில் ஆனால் சைவம், இந்து என்னும் பெயர்களில் சுமார்த்தம் சமீபகாலத்தில் மிகவும் உட்புந்து சைவசமயத்தை சைவசமய கலாசாரத்தை, பண்பாட்டைச் சீர்குலைத்து வருகின்றது.

தமிழ்நாட்டில் திராவிடப்பகுத்தறிவு இயக்கத்தால் சுமார்த்தம் நல்ல பாடம் பல கற்றுள்ளது. ஆனால், இலங்கையிலே அதுவே பீடுநடை பெருமித நடைபோடுகின்றது. சைவநிறுவனங்கள் பல சுமார்த்த சமயத்தையே வெளிப்படையாக துணிவாக வளர்க்க முன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துள்ளன. என்னே நால்வர் நெறி! இதுபற்றி நாம் கடந்த நாற்பது ஆண்டுகளாக நேருக்கு நேராகப் பதிவுத்தபால்களிலே எழுதியவற்றிற்குப் பதிலே வருவதில்லை.

சைவத்தையேபரம்புகின்றோம் எனக் கூறும் இந்து நிறுவனங்களில் சில சுமார்த்தத்தையே பலவாறு பரப்புகின்றன. சைவத்திருமுறை ஓதிப்பரிசும் பாராட்டும் பெறும் ஒருவர் வைணவத் திருப்பாடல்களை ஓதலாமா? இதுதான் சுமார்த்தம். தமிழிலே சுமார்த்த சமயப் பாடல்கள் இல்லை. எனவே இவ்வழி.

## தாயுமானவர் சமய சமரசம்

"சைவசமயமே சமயம்" எனப்பாடியவர் தாயுமான சுவாமிகள். பொய் வந்துழலுஞ் சமய நெறி புகுதவேண்டாம் என்றார் அவர். "சமயாதீதப் பழம் பொருள்" அதுவே சிவம் எனவும் கூறினார். இவ்வாறு கூறிய தாயுமானவர் பின்வருமாறும் கூறுகின்றார். "வேறுபடு சமயம் எல்லாம் புகுந்து பார்க்கின் விளங்கு பரம்பொருளே! நின் விளையாட்டல்லால் மாறுபடும் கருத்து இல்லை. முடிவில் மோன வாருதியில் நதிதிரள் போல் வயங்கிற்றம்மா" இதன் பொருள் : முரண்படும் எல்லாச் சமயங்களும் விசாரித்து ஆராயின் அச்சமயங்களில் விளங்கும் பெரியபொருளே! உனது திருவிளையாடலே அல்லாமல் மாறுபடும் கருத்து இல்லையாகும். முடிவு அற்ற மௌன சமுத்திரம் நதிகள் எல்லாம் கூடுவதற்கு இடம் கொடுப்பது போல விளங்குகிறது.

மேலும் தாயுமானவர், "சைவம் முதலாம் அளவில் சமயமும் வகுத்து மேற்சமயங்கடந்த மோன சமரசம் வகுத்த நீ...." என்கின்றார். மேலும் கூறுகின்றார். "ஆறு சமயங்கள் தொறும் வேறுவேறாகி விளையாடும் உனை ஆர் அறிவார்? அண்ட பகிர் அண்டமும் அடங்க ஒரு நிறைவாகி ஆனந்தமானஅவரின் சைவக்கல்வித் தொண்டிலே ஈடுபட்ட கௌரவம் இராசரத்தினம் அவர்களாவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சைவ வித்தியா விருத்திச்சங்கம் ஏற்படவும் அது நூற்றுக்கு மேற்பட்ட பாடசாலைகளைக் கிராமம் தோறும் தாபிக்கவும் மூலகாரணர் காரைநகர் அருணாசல உபாத்தியாயரே என்பர். இன்று சைவ சமயக்கல்வி எங்கே? அது இந்து என்னும் சொல்லால் மறைக்கப்பட்டும், மறக்கப்பட்டும், மறுக்கப்பட்டும் இருப்பதைப் பரமேசுவராக்கல்லூரி, சைவபரிபாலனசபை, சைவவித்தியா விருத்திச்சங்கம் முதலியவற்றின் சட்டசபையிலே நிறைவேற்றப்பட்ட சட்ட ஆவணங்களே காட்டுகின்றன. இச்சேவை அநுபவமும் நிறைய உள.

பரமேசுவரன் கோவில் கொண்டுள்ள வளாகத்திலே அதே பரமேசுவரனே பரம்பொருள் என நிலைநாட்டும் சைவமயம், சைவகலாசாரம், சைவசித்தாந்தம்ஏன் இடம் பெறவில்லை என்பதைச் சம்பந்தப்பட்டோர் இனியாவது தெரிவிப்பார்களாக.

திருச்சிற்றம்பலம்

**இங்ஙனம்**

*அடியார்க்கு அடியவன் ஞானப்பிரகாசசிவம் (கணபதிப்பிள்ளை)*

*கௌரவஇயக்குநர், தாயுமானவர் சைவப்பாதுகாப்பு சமரச சேவை.*



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சிவஞான வழிபாடு

## அலகு 1

## விநாயகர் வழிபாடு

01. சிவஞான போதம். சிவஞான சித்தியார், சிவ(ஞான)ப்பிரகாசம் மூன்றும் முறையே சைவசித்தாந்த ஞான முதல் நூல் வழிநூல், சார்பு (துணை) நூல்களாகும்.

02. இவைமூன்றிலும் முதலில் விநாயகர் வணக்கம் உளது அன்றியும் சித்தாந்த சாத்திரம் 14 அவற்றுள் பலவற்றில் முதலில் விநாயகர் வணக்கம் உண்டு.

03. இன்றும் பாடசாலைப் பாடநூலில் இடம் பெற்றுள்ள திருவருட்பயனில் பின்வரும் திருக்குறள் உள்ளது.

நற் குஞ்சரக் கன்று நண்ணில், கலைஞானம்
கற்கும் சரக்கு அன்று; காண்.

விநாயகரை வழிபட்டால், அஞ்ஞானம் நீங்கிச்சிவஞானம் பிரகாசிக்கும் கலைஞானம் கற்கவேண்டிய சரக்கு அன்று இதை அறிவாயாக என்பது பொருள்.

04. நம் சிவஞான வழிபாட்டிலே முக்கிய இடம் பெறுவது மெய்கண்டதேவ நாயனார் அருளிய சிவ ஞான போதம். அதிலுள்ள விநாயக வணக்கம் இதோ!

கல் ஆல் நிழல் மலை
வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர்
நல்லார் புனைவரே.

பொல்லார் ஸ்ரீ பொள்ளப்ப
பாத சுயம்பு மூர்த்தி ஆகிய
பொல்லாப் பிள்ளையார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி விநாயகர் வணக்கம் சிவஞான போதத்தின் 12 சூத்திரத்தைக் குறிக் 12 சொற்களால் ஆனது என்பர். மேலும் சிவஞானபோதம் பொது - சிறப்பு என இரு பெரும் பிரிவும் பிரமாண இயல் இலக்கண இயல், சாதன இயல், பயன் இயல் என 4 இயலும் உடையது என்பதைக் காட்ட 4 அடியுள்ள செய்யுளால் ஆனது என்பர். என்னே அற்புதம் இது எனலாம்.

05. சிவஞான சித்தியார் - விநாயகர் வணக்கம்.

ஒருகொட்டன், இருசெவியன், மும்மதத்தன்,
நால்வாய் ஐங்கரத்தன், ஆறு
தருகோட்டம் பிறைஇதழித் தாழ் சடையான்
தரும் ஒரு வாரணத்தின் தாள்கள்
உருகோட்டன் பொடும் வணங்கி
ஓவாதே இரவுபகல் உணர்வோர் சிந்தைத்
திருகு ஓட்டும் அயன்திருமால் செல்வமும்
ஒன்றோ என்னச் செய்யும் தேவே.

சிவஞான சித்தியார் பரபக்கம், சுபக்கம் என இரு பெரும் பகுதிகளை உடையது. அளவாலும் பொருட் செறிவாலும் சித்தாந்த நூலிலே பெரியது இதுவே. தமிழ்க்கவிதை ஆற்றலிலே சித்தியார்க்குச் சமமாக இனிமையிலும் எளிமையிலும் ஒப்பிடத்தக்க கவிஞர்களாகக் கம்பன் கச்சியப்பர், சேக்கிழார், பாரதியார் போன்ற ஒரு சிலரையே கூறலாம். ஆனால் சித்தியார் அருளிய அருள் நந்தி சிவாசாரியார்க்கு உரிய இடத்தைத் தமிழ் கவிதை உலகம் இன்னும் கொடுக்க வில்லை என்பது கவனிக்கத்தக்கது.

"பார்விரித்த நூல் எல்லாம் பாரத்தறியச் சித்தியாரின்
ஓர் விருத்தப்பாதி போதும்" என்பதொன்றே போதும்.

பாதி விருத்தத்தால் இப்பார் விருத்தமாக உண்மை சாதித்தார் பொன்னடியைத் தான் பணிவது எந்நாளோ" என்கிறார் தாயுமான சுவாமிகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

06. சித்தியார் சுபக்கம் - அறுவர் உரை

சித்தியார் சுபக்கம் பரபக்கம் இரண்டும் தனித்தனி முந்நூறுக்கு மேற்பட்ட செய்யுள்களை உடையன. நூலின் முதற் பகுதி பரபக்கம் - பிறசமயபகுதி சுபக்கம் சுயசமயப்பகுதி சிவஞானபோதம் சிவப்பிரகாசம் சுபக்கமே உள சித்தியார் சுபக்கத்திற்குப் பழைய அறுவர் உரை உள. கொழும்பு திருவிளங்கதேசிகரும் நல்லதோர் உரை தந்துள்ளார். அவரின் சிவப்பிரகாச உரையும் நனி சிறந்ததாகும் கொழும்பு திருவிளக்கம் கனகராயர் சிவஞான போதத்திற்கு ஆங்கிலத்தில் விளக்கம் தந்துள்ளார். திருவருட்பயன் சிவபாதசுந்தரனார் உரை பிரசித்தம் இவ்வளவும் இருந்தும் இன்றைய நிலை சிந்தனைக் குரியதே பரபக்கத்திற்கு ஒரு உரையே உளது மேற்படி ஒருகோட்டன் விநாயக வணக்கம் பரபக்கம் சுபக்கம் இரண்டிலும் காப்புச் செய்யுள் கருத்து விளக்கம் பின்னர் வரும்.

07. சித்தியார் பரபக்கம் - கடவுள் வழிபாடுகள்

சிவபெருமான் சிவசக்தி விநாயகர் முருகன் மெய்கண்டார் ஐவர்க்கும் சித்தியார் பரபக்கம் மங்கல வாழ்த்துப் பகுதியில் வழிபாடு உண்டு இப்பகுப்பு சுபக்கத்தில் தனியே இல்லை இரண்டும் சேர்ந்ததே சித்தியார்.

08. சிவப்பிரகாசம் - கடவுள் வழிபாடுகள்

ஒளியான திருமேனி உமிழ்தானம் மிகமேவு களியார வரும் ஆனை கழல்நாளும் மறவாமல் அளியாளும் மலர்தூவும் அடியார்கள் உளமான வெளியாகும், வலிதாய வினைகூட நினையாவே என்பது காப்புச் செய்யுள்.

மேலே காட்டிய சித்தியர் பரபக்கத்தை அடியொற்றி நான்கு கடவுளர்க்கும் வழிபாடு செய்த உமாபதி சிவாசாரியார் பின்வருமாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவர்பிரான் வளர் கயிலைக் காவல் பூண்ட
திரு நந்தி அவர் கணத்தோர் செல்வர் பாரில்
பாவிய சத்திய ஞான தரிசினிகள் அடிசேர்
பரஞ்சோதி மாமுனிகள் பதியாம் வெண்ணெய்
மேவியசீர் மெய்கண்ட திறலார் மாறா
விரவுபுகழ் அருணந்தி விறலார் செல்வத்
தாவில் அருள் மறை ஞானசம்பந்தர் இவர்இச்
சந்தானத்து எமை ஆளும் தன்மை யோரே.

09. வாசகர்களே! உங்கட்கும் வணக்கம்

மேற்காட்டிய கடவுள் வணக்கம், குரு வணக்கம் போல வாசகர்களாகிய அடியார்களை வணங்குவதும் சைவசித்தாந்த சிவஞான வழிபாடாகும். பின்வருவது சான்றாதாரம்.

செம்மலர் நோன்தாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ அன்பரொடு மரீஇ
மால்அற நேயமும் மலிந்தவர் வேடமும்
அலயம் தானும் அரன் எனத் தொழுமே.

என்பது சிவஞான போதம் 12 ஆம் சூத்திரம் பயனியல். இதனைச் சித்தியார் பின்வருமாறு கூறுகின்றது.

10. சித்தியார் சிவஞான வழிபாடு இதோ!

செங்கமலத்தாள் இணைகள் சேரல் ஒட்டாத்
திரிமலங்கள் அறுத்து, ஈசன் நேசரொடும் செறிந்திட்டு
அங்கு அவர்தம் திருவேடம் ஆலயங்கள் எல்லாம்
[illegible] எனவே தொழுது இறைஞ்சி ஆடிப்பாடி
எங்கும் யாம் ஒருவர்க்கும் எனிலோம் அல்லோம்
யாவர்க்கும் மேலானோம் என்று இறுமாப்பு எய்தித்
திங்கள் முடியார் அடியார் அடியோம் என்று
திரிந்திருவர் சிவஞானச் செய்தி உடையோரே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலும் சில சித்தியார் திருப்பாடல்கள் இதோ!

ஈசனுக்கு அன்பில்லார் அடியவர்க்கு அன்பில்லார்
எவ்வுயிர்க்கும் அன்பில்லார் தமக்கு அன்பில்லார்
பேசுவது என்? அறிவிலால் பிணங்களை நாம் இணங்கில்
பிறப்பிணிலும் இறப்பினிலும் பிணங்கிவர் விடு நீ
ஆசையொடும் அரனடியார்அடியாரை அடைந்திட்டு
அவர்கருமம் உன்காமம் ஆகச் செய்து
கூசி மொழிந்து அருள் ஞானக் குறியில் நின்று
கும்பிட்டுத் தட்ட மிட்டுக் கூத்தாடித் திரியே
மேலே காணப்பெறுகின்ற பாடலைப் பின்பற்றியே

எமது குருலிங்க சங்கம வழிபாடு நாற்பது வருடங்கட்கு மேலாக நடைபெறுகின்றது.

11. சிவப்பிரகாசம் கூறும் வழிபாடு.

இது சிவஞானச்சரியை வழிபாடு என்பர் தொண்டர்கள் இடத்தும் வானோர் தொழும் திருமேனிதானும்அண்டரும் கண்டிலாத அண்ணலே என வணங்கு வெண்தரளங்கள் சிந்த வழிமொழிகுழறி வணங்கி வெண்தரளங்கள் சிந்த வழிமொழிகுழறி மெய்யே கண்டு கொண்டு இருப்பர் ஞானக் கடல் அமுது அருந்தினோரே.

12. குரு - லிங்க -சங்கம வழிபாடு சிவஞான வழிபாடு

சிவஞான குருவையும் சிவலிங்கத்தையும் மனம் - மொழி - மெய் - மூன்றாலும் வழிபாடு செய்வது சிவஞான வழிபாடாகும் என்பது சைவசித்தாந்தம்

முதலாவது வழிபாடு நிறைவு

திருச்சிற்றம்பலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மெய்கண்டார் ஆதீனம்
# இலவச சேவை விபரம்

ஞான சிவ உள்ஒளி வழிபாடு.

சைவசித்தாந்த சாத்திர விளக்கம்.

நிஷ்காமிய சமயாதீத நெறிமுறை.

சைவசமயப் பாதுகாப்புச் சேவை.

சமய சமரச சேவை.

சமயகுரவர், சந்தானகுரவர், சித்தர் வழிபாடு.

அறுபத்துமூன்று நாயன்மார் நினைவுகள்.

மெய்கண்டார் சிவஞான போதம் விளக்கம்.

சைவசமய தருக்க சாத்திரப் பயிற்சி.

சைவபுராணப் பயிற்சி.

ஞானபூசை, தீட்சைவகை, அநுபூதி.

ஈழத்துச் சைவச்சான்றோர், தொண்டர்கள்.

சைவசமய வரலாறு, இலங்கையின் பங்களிப்பு.

குரு, லிங்க, சங்கம சேவை, வழிபாடு.

நால்வர் சிவத்தல யாத்திரை விளக்கம்.

மேற்படி புவியியல் வரைபட விளக்கம்.

சைவசமய நூல்களின் காட்சி.

சைவசமய சஞ்சிகைக் காட்சி.

சைவசமய செய்திக் காட்சி.

உள்ஒளி விளக்கமும், பஞ்சமாபாவங்களும்.

சரியை, கிரியை, யோக நெறிகள்.

ஞானக் கவிதை எழுதும் பயிற்சி.


சைவத்துறவு, குருசீட மரபுப்பயிற்சி.

சைவ ஆதீனங்களின் செயற்பாடுகள் மற்றும் பல இலவச சேவைகள்.

**இச் சேவைகளை ஆலயங்கள், சங்கங்கள், பாடசாலைகள், சைவாபிமானிகள், தனிப்பட்டோர் பெற்றுக் கொள்ளலாம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்திய சிவதலங்களில் குருமுதல்வர்





## அடியார்களுக்கு குருமுதல்வர் அளிக்கும் விளக்கம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF CEYLON

## Diploma

This is to certify that

Kandasamy Kanapathippillai

has followed a course in

Tamil and related subjects

at this University and has been awarded a Diploma in

Tamil

after passing the examinations prescribed by the
Acts and Regulations of the University

8th August 1959

[illegible signature]

Acting Registrar.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# UNIVERSITY OF CEYLON

This is to certify that

at a Convocation holden in Peradeniya on the

*Twenty third* day of *December* 1964

*Kandaswamy Kanapathippillai*

was admitted to the Degree of

*Bachelor of Arts*

Witness our hands this *Twenty third* day of *December* One thousand nine hundred and sixty *four*

N. Attygalle

Vice-Chancellor

Registrar

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

திருஞானசம்பந்தசற்குரு துணை



"ஞாலநின் புகழே மிக வேண்டுந் தென்
ஆலவாயி லுறையும் எம் ஆதியே"

# மதுரை, திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்



# பட்டமளிப்புப் பத்திரம்

சைவ சமயத்திற்கும், செந்தமிழ் மொழிக்கும் திருவருள் துணைகொண்டு தொண்டாற்றிவருந் திருவாளர் க. கணபதிப் பிள்ளை அவர்களின் சீரிய பணிகளைப் பாராட்டுமுகத்தான் நமது ஆதீன ஆதிகுருமூர்த்தி, திருஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளது குருபூசை மகோற்சவத்தில் சித்தாந்த நிலாநிதி என்ற சிறப்புடைப் பட்டஞ்சூட்டி, அவர்களது திருத்தொண்டு மேன் மேலுஞ் சிறக்கத் திருவருளைச் சிந்தித்து ஆசீர்வதிக்கின்றோம்.

நாளிது பரிதாபி வருஷம் வைகாசி-மீ 17 உ செவ்வாய்க் கிழமையன்று நடைபெற்ற பூசைமுகத்தில் அருளப்பெற்றது.

திருஞானசம்பந்த தேசிக [signature]

THIRUGNANA SAMBANDA SWAMIGAL AADHEENAM, ★ MADURAI ★ மதுரை.

மதுரை
30. 5. 1972

# Government of Ceylon

## DEPARTMENT OF EXAMINATIONS

----- KANDASWAMY KANAPATHIPPILLAI -----

of NAINATIVU.

Index No. JP 882. December, 1955,

is awarded this

# GENERAL CERTIFICATE OF EDUCATION

(Ordinary Level—English Medium)

in the following EIGHT subjects

1. ENGLISH LANGUAGE (ORDINARY PASS)
2. TAMIL LANGUAGE (CREDIT)
3. ARITHMETIC (DISTINCTION),
4. TAMIL LITERATURE (CREDIT),
5. HISTORY (ORDINARY PASS),
6. GEOGRAPHY (ORDINARY PASS),
7. CIVICS (ORDINARY PASS),
8. HINDUISM (SAIVAISM)(CREDIT)

and

having satisfied the necessary conditions

is awarded the

# SENIOR SCHOOL CERTIFICATE

(ENGLISH)

SECOND Division

SUPERINTENDENT OF EXAMINATIONS

COMMISSIONER OF EXAMINATIONS

Colombo 2, March 28, 1956.

Signature of above-named Candidate

*Certificate No.* S 3877

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AF 15
(*Degree*)

# UNIVERSITY OF CEYLON

*Ref. No:* EX/AF/ST/49.

*Date:* 30-4-1971.

## CERTIFICATE OF REGISTRATION AS AN EXTERNAL CANDIDATE

This is to certify that Kandasamy KANAPATHIPPILLAI. [illegible]

................................................................................................

........................................has been registered as an external candidate for the

**Special Degree Examination in Arts**

in the Faculty of Oriental Studies/Arts as from 1st October, 19 70, and that he/she is eligible to sit this examination in accordance with the regulations in 19 71 or in a subsequent year within the period of validity of his/her registration.

His/Her registration will be valid, subject to the regulations, for a period of five Academic Years and may be renewed.

The subject/s for the examination shall be as follows :—

*Principal*

Tamil

*Subsidiary*

History

ASSISTANT SECRETARY

*H. L. Wimalasuriya*
SECRETARY

(*Please turn over*)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## IMPORTANT

1. A copy of a Certificate of Registration will not be issued under any circumstances.

2. The reference number given overleaf must be quoted in correspondence with the University.

3. All candidates for an examination are expected to have acquainted themselves with the current regulations for that examination. The regulations for the examination mentioned overleaf are contained in the publication *Examinations for the Degree of Bachelor of Arts,* which is available for purchase at the External Examinations Branch, University of Ceylon, Peradeniya, and at the Ceylon University Press, Thurstan Road, Colombo 3.

4. The word "year" when used without any qualification means a calendar year, and the term "Academic Year" means the period intervening between the first day of October of one year and the thirtieth day of September of the following year.

5. A person shall not register concurrently as an internal student and as an external candidate.

6. Notwithstanding the fact that he may be otherwise eligible, a person registered as an external candidate for an examination shall not, while the registration is in force, register for or sit an examination of another University, or sit the Ceylon General Certificate of Education (Advanced Level) Examination with a view to gaining admission to the University as an internal student.

7. A registration for an examination shall be deemed to have lapsed at the expiration of its period of validity, and a candidate whose registration has so lapsed may renew his registration for a further period, provided that he is otherwise eligible. An application seeking renewal of registration must be made by formal letter in the Academic Year at the end of which the registration would lapse. The responsibility of applying for renewal of registration lies with the candidate concerned.

8. Notwithstanding anything stated to the contrary, the University Senate shall have the right to cancel the registration of an external candidate for an examination at any time.

9. Examinations will be held in the month of July each year and applications for entry to examinations will be accepted in the month of March of that year, but the University may call for applications for entry to examinations or conduct examinations earlier or later in any year.

   Publicity will be given to the last dates of entry to examinations by notices in the Press, but the University will not send communications regarding this matter to the prospective candidates individually.

10. An application for entry to an examination must be made on the prescribed form and should reach the University on or before the last date of entry to that examination. Prescribed forms will be sent on application in the month in which applications for entry to the examination will be accepted.


    Where a form is required to be sent by post, a self-addressed stamped envelope of not less that 7″×4″ in size must be sent to the Secretary, External Examinations Branch, University of Ceylon, Peradeniya.

ஆதவன் அச்சகம் மில், வீதி, வவனியா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாயன்மார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org